# மாவலி

ஒக்டோபர் 1973

மாத வெளியீடு



விலை சதம் /- 50.

## இந்த இதழில்...

### கட்டுரைகள்


அருட்ஜோதி இராமலிங்கர்
வாழவைப்போம் தொழிலாளரை
சட்டங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்
தொழிலாளியின் தேவை
இலங்கைத் தோட்டங்களில்
தேயிலைத் தொழில்துறை
மாந்தரில் தெய்வம் மகாத்மா
தொழிலாளியின் காவலன்
சர்வதேசத் தொழிற்சங்கங்கள்
எது சோஷலிசம் ?
மலையக இளைஞர்கள்


### கவிதைகள்


கீதாஞ்சலி ..
திருவருட்பா கேண்மின்...
நாம்தானுண்டு...
கம்போசிட்டர் செய்த கவிதை...
வீழ்த்திவிட்டார்..
மாதிறம் பெற்றனரோ...
ஆதரவு தேடிடுவாய்...
ஒரு கவிஞனின் துயராற்றுமை


### கடிதங்கள்


ஆசிரியருக்கு...
செய்திக் கடிதம்...
மாவலிச் சித்தர் பதில். . .
அறிவுரைகள். . .

பயிர் 1. அக்டோபர் 1973. கதிர் 4

# மாவலி



தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—மகாகவி சுப்பிரமணிய பாரதி.

## நியமனப் பதவியா ? தொழிலாளர் நலனா ?

கூட்டுச் சேராமை பற்றி இலங்கையில் பலவாறு கூறப்படுகிறது. எமது தொழிலாளர் தேசிய சங்கம் அரசியல் கட்சிக் கூட்டுச் சேர்க்கை யற்றது. ஆனால் தளர்ந்த நடுநிலையைக் கடைப்பிடிக்காமல் உறுதியான நடு நிலையைக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் தோட்டத் தொழிலாளர் இந்நாட்டு அரசு எதற்குமே உடன்படான தூதுவர்களாக ஏற்கப்பட்டதில்லை.

இலங்கை தேசியப் பேரவையில் நியமனப்பதவிக்காகப் போட்டா போட்டியிடும் இருபெரும் தொழிற்சங்கங்களும் இருபெரும் அரசியல் கட்சிகளின் கூட்டுச்சேர்க்கையுடையன. ஆனால் தோட்டத்தொழிலாளிக்கு எந்த அரசு வந்தாலும் அவன் வாழ்க்கை மட்டும் சீரடைந்ததாகக் காணப்படவில்லை.

நாட்டின் மூன்றுவது பெரும்பான்மையான மக்களுக்கு நியமனப் பதவி என்றிருப்பதே ஒரு பெருந்தவறாகும். நியமன அங்கத்தவர்களின் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்ந்தால் அவர்கள் ஆற்றியுள்ள சேவை மிகச் சிறிது. நாடற்ற மக்களின் பிரச்சினைகளை அவர்கள் அணுகிட வாய்ப்புக்கள் கிட்டிடவில்லை. தலைவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியையோ ஆதரித்து அதற்கேற்ப தமது அரசியல் கொள்கைகளை மாற்றி நியமனப் பதவிக்காகவே தாளம் போடுகிறவர்களாகவுள்ளனர். இந்த நியமனப் பதவிக்காகத் தொழிலாளர்களே பலிவாங்கப் படுகிறார்கள். அரசியல் தகுதி—வாழ்க்கை வசதி— சுகாதாரம்— கல்வி— சம்பளம் ஆகியன நேற்றைய பிரச்சினைகளல்லவே! இவற்றினுக்காக நியமன அங்கத்தவர்கள் என்ன செய்துள்ளனர். என்ற கேள்வி பிறக்கலாம்; அதற்குப் பதிலும், அவர்கள் யாதே செய்தனர் என்பதில் அடங்குகிறது.

பழைய வைசிராய் சபையிலிருந்தவர்களால் இந்திய விடுதலைக்கு ஏதும் செய்திட முடியவில்லை. ஆனால் அடிமைத் தளையை அவர்கள் பலப்படுத்துவதில்தான் ஈடுபட்டனர். அதுபோல் நியமன அங்கத்தவர்களும் தோட்டத்தொழிலாளருக்கு மேன் மேலும் இன்னல் விளைக்கக் காரணமாயிருந்தனர். அண்மையில் தோட்டச் சுவீகரிப்பு நடந்தபோது

தேச முழுவதுமே பயங்கரம் நிலவியது. அது ஒரு துயரச் சோதனை யாகும். அணுவளவு தவருனத் திருப்பமாகியிருந்தால் தோட்டங்களில் இனக் குழப்பபமே உண்டாகியிருக்கும். நாடற்ற மக்களின் பாதுகாப்பு பொழுது போவதற்குள் பறிக்கப்பட்டது. நியமன அங்கத்தவராகத் தேசியப் பேரவையில் இருப்பவர், உரிமைக் குரல் எழுப்பாரோ என எதிர் பார்த்தோம். அவரோ அரை வார்த்தை யேனும் பேசவில்லை. தேசியப் பேரவையிலிருக்கும் ஏனைய தொழிற்சங்கத் தலைவர்களும் துரதிர்ஷ்டசாலிகளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆண், பெண் தோட்டத் தொழிலாளர்கள் படும் அவதியைச் சிந்தித்திட வில்லை. ஓட்டுரிமையும், நாட்டுரிமையும் உள்ள வராக தோட்டத் தொழிலாளர் இருந்திருப்பரேயானுல் இந்தத் தலை வர்கள் அவர்களை அடிமைகளைப் போல நடத்தியிருக்க மாட்டார்கள். தோட்டத்து மக்களின் நியமனப் பிரதிநிதியாக இருப்பவர்கள் அந்த மக்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பாதது பெருந்துரோகமே யாகும்.

நியமனப் பதவிக்காக ஆளும் அரசின் கடைக்கண் பார்வைக்கு இலக்காகாதத் தலைவர்கள் அரசுக்கு எதிரான பிரச்சாரங்களைச் செய்து தோட்டத் தொழிலாளரின் எதிர்காலத்தை மேலும் ஆபத்தானதாக வுஞ் செய்து விடுகின்றனர். நாடற்ற தோட்டத் தொழிலாளியோ இரு புறத்திலும், உரிமை இழக்கப்பட்டவனுகவும், மறுக்கப்பட்டவனு கவும் புறக்கணிக்கப்படுகிறுன்.

இன்று தோட்டத் தொழிலாளிக்கு 26 நாள் வேலை கிடைத்திட வில்லை. அவன் பஞ்சத்திற்கு ஆளாகிவிட்டான். அவனது துயரகல எவர் மீதும் வெறுப்பின்றி பரந்த நோக்குடன் நமது சகல சக்திகளை யும் ஒன்று திரட்டிட வேண்டும். சென்ற யுத்த காலத்தில் பிரித்தா னியர் உணவைச் சேமித்துத் தந்தனர் எனப் பேசுவதில் பயனில்லை. பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கைகளையும், துரதிர்ஷ்டவசமாக இந்திய முதலாளிகள் மூலம் எப்படிப் பொருளீட்டப்பட்டதென்பதனை யுமே அது நினைவூட்டுகிறது

இத்தாலியுடனும், ஜெர்மனியுடனும் பிரித்தானியர் போரிட்ட போது மகாத்மா காந்தி விடுதலைக்கான சத்தியாக் கிரயத்தைக் கை விட்டு பிரித்தானியரின் வெற்றிக்கு உதவிடக் கூறியதை இப்போது நினைவு கூறி அரசாங்கத்தின் உணவு உற்பத்திக்கு உதவிடவேண்டும். ஆனுல் தோட்டத் தொழிலாளியின் நிலை பரிதாபமாயுள்ளது. கிரா மத்தாரும், நகரத்தாரும் வேறுபட்ட வாழ்வு நடத்துகிறவர்கள். தோட்டத் தொழிலாளிக்கு உணவுற்பத்தி செய்ய நிலமில்லை அவன் நாட்டின் பொருளாதாரத்திற்காக இராப்பகலாக ஓய்வின்றி உழைக் கிறுன். நகரத்தாருக்கு கிழங்கும், நெல்லும் கிடைக்கின்றன. ஆனுல் ஓய்வில்லாமல் உழைக்கும் தோட்டத் தொழிலாளிக்கு இந்த வாய்ப் புக்கள் கிடையாது. அரசாங்கம் தோட்டத் தொழிலாளியின் கடின உழைப்பை எண்ணி, அவனுக்குக் கூடுதலான உணவு கிடைத்திட வழி செய்திட வேண்டும்.

ஆகவே நியமனப் பதவிகளுக்காகவே தொழிற்சங்கத் தலைவர்கள் போட்டியிடுவதை விடுத்துத் தோட்டத் தொழிலாளரின் சுபீட்சத்திற் காக ஒத்துழைப்பு நல்குவார்களென எதிர்பார்ப்போமாக.

---

(மாவலியில் வெளிவரும் மதிப்புரைகள், கதை, கட்டுரை, கவிதைகள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.)

## வள்ளுவருக்குப் பின் தமிழினத்தின் (சோஷலிச) சமரச வாழ்வுக்கு வழிகாட்டிய தனித்துவ ஞானி

அருட்சோதி இராமலிங்கர் சாதி, மத, மார்க்கக் கோட்பாடுகள் அத்தனையுங் கடந்து சுதந்திரமாகவே ஒவ்வொருவரும் இறைவணக்கத்தை அனுட்டிக்க வழிகாட்டினார். சகல இன மக்களும், ஒளிவடிவில் ஆண்டவனைக் கண்டு தொழுதேற்றிட நெய்விளக்கேற்றி, அந்தப் பிழம்பையே அருட்சோதியாக உள்ளத் திருத்தி ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்த்தார். சகலரும் ஒருமுகமாக அருட்பாக்களைப் பாடி வேற்றுமையின்றி வாழச் செய்தார். தமிழில் இறைவணக்கத்தையும், இன்று சோஷலிசம் என்றழைக்கப்படும் சமரசத் தத்துவத்தையும் தமிழினத்திற்கு முதன்முதலாகப் போதித்த மகாத்மா அவர். தமிழினத்தவர் இராமலிங்க வள்ளலார் காட்டிய வழியைப் பின்பற்றி வெற்றியுடன் வாழவேண்டுகிறோம். மூடபக்தியாலும், மூடபழக்கங்களாலும் இன்னும் கவரப்பட்டுள்ள தமிழ் மக்கள் வள்ளலாரின் அருட்பாக்களைப் பாடி வள்ளலார் மன்றங்களை அமைத்து அவரது போதனைகளைப் பரப்பிடத் துணியவேண்டும். இயற்கை நெறியாம் சைவம் வீர வணக்கத்துட்பட்டதல்ல என்பதையும் உணர்ந்திடவும் வேண்டும். —ஆ-ர்.

# அருட் ஜோதி இராமலிங்கர்

—கவியரசன்—

'அருட் பெருஞ் சோதி — தனிப் பெருங் கருணை'' என்ற தத்துவத்தை உலகிற்களித்துத் தமிழினம் கண்ட சமரச வாழ்வை உலகெங்கினும் நிலைநிறுத்தத் துணிந்தெழுந்த மகாத்மா அருட்ஜோதி இராமலிங்க வள்ளற் பெம்மான்.

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் 5 - 10 - 1823ல் வடலூர் ஞானி அருட்சோதி இராமலிங்கர் தமிழகத்தில் பிறந்தார்.

இவரது தந்தை இராமையா பிள்ளை. தாயார் சின்னம்மாள். இவர்களின் ஐந்தாவது புதல்வரே இராமலிங்கர். பிள்ளைப் பராயத்திலே ஓதாது உணரும் சித்தியைப் பெற்றார். கருணையே சைவநெறி எனவும் இறைவன் அருட்சோதியே எனவும் உலகெலாம் சமரச சுத்த சன்மார்க்கந் தழுவிய ஓரினமே என்றும் அருளிய அற்புதத் தமிழ் ஞானி அவர்.

''சைவம் இயற்கையின் இசைவு. இந்த இசைவு பொது. காருண்யமே இந்த இசைவின் இயல்பு, இது மதங்களுக்கும், மதக் கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. சாதிப் பாகுபாடுகள் சைவநெறி

யாம் சமரசத்தில் இல்லையென மனிதர் தம்மைத் தாம் உணர்ந்து மரண மிலாப் பெருவாழ்வு எய்துவதற்கு வழிகாட்டியவர் இராமலிங்கர்.

போலி மதங்களாலும், மதவாதி களாலும், சாதி வெறியர்களாலும் ஒரு பெரும்பகுதி தமிழ் மக்கள் தாழ்த்தப்பட்டனர். அந்நிய ஆதிக்கத்தால் நசுக்கப் பட்டு வறுமையால் வாடிப் பதை பதைத்தனர். சுய அறிவு கெட்டுச், சொந்தச் சுதந்திரத்தை விற்று, மூட வழக்கங்களால், மூட பக்தி காரணமாக ஆயிரம் ஆயிரந் தெய் வங்களை வணங்கி அடிமை களைப்போல அல்லலுறுவதைக் காணச் சகியாத இராமலிங்க வள் ளல் அந்தத் தமிழ் மக்களை மதவெறி யர்களிடமிருந்தும், சாதி வெறியர் களிடமிருந்தும், போலிப் பக்தியி லிருந்தும் விடுவித்தார். சுய அறிவு பெற்ற ஒரு சமுதாயமாகத் தமி ழினத்தை உருவாக்கிடத் துணிந் தார். மதவாதிகள், மதங்களைத் தமது சாதி அந்தஸ்து, பதவிகளுக் காகவும், பிழைப்புக்கோர் வழி யாகவும் ஆக்கிக்கொண்டதால் வள்ளலாரின் சமரசக் கொள்கை களை வெறுத்தனர்.

வள்ளற்பெம்மானின் அருட்பாக் கள் தமிழில் எங்கும் ஒலிக்கத் தொடங்கியதும், சாதியிலே மதங் களிலே ஊன்றியிருந்த மக்களின் நம்பிக்கை தளர்ந்து அருட்சோதி வடிவே தெய்வ வடிவெனக் கூட்டு வழிபாடுகள் ஆங்காங்கே பெருகிய தும், சீர்த்திருத்த எழுச்சியும் தமிழ்ப்பற்றும் வளர்ச்சியுற்றுப் பரவியதும் மதவாதிகளுக்குப் பெரிய இடையூறுகளாகின.

மதவாதிகளும், சாதிவெறியர் களும், அருட்சோதி வள்ளலார் மீது வீண்பழி சுமத்தி எதிர்ப்புக் காட்டினர். கோயில் பூசை வழி பாடுகள் தமிழில்தான் நடை பெற வேண்டுமெனவும் மக்கள் விரும்பத் தொடங்கினர். இதனுல் வள்ளலார் மீது பதவி விரும்பி களும் ஆஷாடபூதிகளும் சொற் போர் தொடங்கினர். தமிழினத் தைத் தாழ்த்தி இந்துமதத்தின் பெயரால் சைவநெறியை மூடி மறைத்த போலிக்கூட்டத்தார் போலிச் சைவத்தை மக்கள் மத்தியி லிருந்து அகற்றவிடாமல் பெருந் தீங்குகள் செய்தனர்.

ஆணவப் பித்தர்களைக் கண்டு மனம் நொந்தார் வள்ளற் பெம் மான். அவர்களின் அறியாமை யைக் கண்டு உள்ளங் குமுறினுர். நல்லது செய்ய வந்த நான் வேற்று னல்ல உங்களில் என்னையும் ஒருவ னுக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டார்.

''வாழையடிவாழை என வந்தத் திருக்கூட்ட மரபினில் நான் ஒரு வன்'' என்று மனந்திறந்து கூறி னுர். ஏற்பாரில்லை. கருணையின் வடிவான அருட்சோதி வள்ளல் பெருமான் இந்தப் பொல்லாத மூட மனிதர்களுக்காக கண்ணீர் வடித்தார். தமிழினம் பண்டு செய்த தவப்பயனுகத் தோன்றிய மகான் தம் காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் ஆதரவின்மையால் "ஆன்ம நேய ஒருமைப்பாடு" காணும் புனிதப் பணி முற்றுப் பெறு முன்னரே யாக்கையுடன் ஒளியாகிவிட்டார். அந்த நாள் 1874ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் வெள்ளிக்கிழமை இரவு 12 மணி. அப்போது வள்ளற் பெம் மானின் வயது ஐம்பத்தொன்று.

இராமலிங்கப் பெருமான் கடைசியாகப் பாடிய பாடல்

''பிச்சுலகர் மெச்சப் பிதற்று
கின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த
இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாந் தீர்ந்தேன்
அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த
நித்திரை செய்கின்றேனே.''

என்பதுதான். இராமலிங்க வள்ளலாரின் அருட்பாக்களைப் போற்றிப் பயின்று உண்மை உணருவோர் என்றுமே வீழ்ச்சியடைவதில்லை.

நமது மலையகத்தமிழ் மக்களும், ஏனைய தமிழ் மக்களும், சுக வாழ்வு வாழ விரும்பும் அனைத்துலகத்தாரும் இராமலிங்க வள்ளற்பெம்மானின் அருட்பாக்களைப் பாடி அவர் காட்டிய சமரச சுத்த சன்மார்க்க வழியாம் கருணையை உணர்ந்து மேன்மை பெறவேண்டும்,

ஒவ்வொரு தோட்டத்திலும் வள்ளலார் மன்றம் அமைத்து, சாதி மத பேதமற்ற அருட்சோதி வழிபாட்டினை ஏற்பாடு செய்து கூட்டு வழிபாடுகள் புரிந்து தமிழ்ச் சமுதாயம் தெளிவுபெற்ற சுதந்திரச் சமுதாயம் என்பதை நாடறியச் செய்திடவேண்டும்.

வள்ளற் பெம்மானின் அருட்பாக்களைப் பாடிப்பாடி ஒவ்வொரு வாலிபனும் உண்மையான சைவ நெறியைக் கடைபிடித்து, இது வரை நடைமுறையில் கொண்ட மூட பழக்கவழக்கங்களையும், மூட பக்தியையும் நீக்கி அருட்சோதியே இறைவடிவம் என்ற நம்பிக்கையுடன் சமுதாயத்தில் ஒருமைப்பாட்டெழுச்சிக்கு அடிகோள வேண்டும்.

இராமலிங்க வள்ளற்பெம்மானைப் போற்றி அவர் காட்டிய அருட்பா வழியில் நிற்போருக்கு எக்காலத்திலும் துன்பமில்லை.

வள்ளற்பெம்மானை வாழ்த்தாத வம்பர்களால்தான் இன்றைய தமிழினம் தாழ்ந்துவிட்டது. கருணையிலா ஆட்சிக்குள் தமிழினம் கண்ணீர் வடிக்கிறது. எனவே, இப்போது தொடங்கி இராமலிங்கப் பெருமானின் அருட்பா மழையைப் பொழியும் அறிவாளர்களைத் துணைகொண்டு தமிழினத்தின் இன்னல் நீங்கிடவும் உயிர்பெற்ற சுதந்திர உரிமை வாழ்வு அடைந்திடவும் துணிவோமாக.

வாழிய வள்ளலார் காட்டிய வழி.
வாழிய அருட்பா.
அருட்பெருஞ்சோதி— தனிப்
பெருங் கருணை.

---

## பத்தும் பறந்துபோம்!

மனிதனுக்குப் பசி என்பது கொடிய ஒரு நோய். எந்த விஷ நோயையும் மனிதன் நவீன கண்டுபிடிப்புக்களால் இல்லாது செய்து விடலாம். ஆனல் பசியை அழித்திட முடியாது என்பது பகிரங்க உண்மை. பசிவந்தால் பத்தும் பறந்துபோம் என்கிறர் ஒளவைப் பிராட்டி. பசிவந்துவிட்டால் பசித்தவன் தனது மானத்தையும் குலத்தையும் கல்வியையும் வல்லமையையும், அறிவுடைமையையும், தான் செய்த தர்மத்தையும், தவத்தையும், முயற்சியையும், துணிவையும், இனிய காம சுகத்தையும் எண்ணுவதில்லை. பசி வந்ததும் இவைகளை அவன் மறந்து போய் விடுவான் என்று ஒரு வெண்பாவில் பாடியுள்ளார் அவர். பசி அத்தனைக் கொடிது. இவ்வளவு நுணுக்கமாகப் பசியின் கொடுமையை உணர்ந்திய ஒளவை யார் போன்ற அறிவுடையோர்களை இன்று காண்பதரிது. எனவே பசியை நீக்கிடத் துணிவதே சிறந்த தொண்டு.

மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை— தேனின்
கசிவந்த சொல்லியக்கால் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்.

# திருவருட்பா ஒலிக்கக் கேண்மின்

— தனி வழிக் கவிராயர் —

நாமார்க்கும் குடியல்லேம் நமது சொந்த
நலன் காக்கும் சுதந்திரமும் உரிமைப் பேச்சும்
சோமாறிக் கும்பலுக்கு இல்லை; எங்கள்
சுய உரிமை மதிப்பார்க்கும் துணைசேர்வார்க்கும்
ஏமாளியாகாமல் நட்பைப் பேணி
எம்மினத்துச் சுதந்திரத்தை எய்தும் மார்க்கம்
யாமாகக் காண்போம் முன் வள்ளற் பெம்மான்
வழங்கியதாம் சமரசத்தை வளர்ப்பதாலே.

சாதியிலே மதங்களிலே தெய்வம் இல்லை;
சாத்திரத்தில் கோத்திரத்தில் தெய்வம் இல்லை;
ஆதியிலே இந்து மத மாகி வந்த
ஆரியரின் வழக்குகளில் தெய்வம் இல்லை;
மேதினியில் சைவ மெனும் இயற்கை நீதி
முதன்மை தனை அறிந்திட்டால் தெய்வம் என்ற
சோதியதைக் கருணை எனக் காண்பீர்; பொய்மைச்
சூழ்ச்சிவிட்டு சமரசமே வளர்க்க வாரீர்.

சென்ற நூற்றுண்டினிலே தமிழ்நாட்டின் கண்
சேர்ந்திட்ட கொடு ஆட்சித் துணையைக் கொண்டு
வென்றவராய் வைதீக உயர்ந்த சாதி
வமிசத்தார் என்பாரும் சைவ நீதி
கொன்றவராய் இந்து மத சாதிபேதக்
கொள்கைகளால் தமிழினத்தை அடக்கிவைத்து
நின்றதையுங் கண்டுளமும் நொந்த வள்ளல்
இராமலிங்க அருட்சோதி பெம்மான் ஆவார்.

சாதி வெறி, மத வெறிகள் அடிமை வாழ்வு
சாத்திரங்கள் செய்திட்ட சூழ்ச்சியாலும்
நீதியில்லா முறையாலும் தமிழர் வாழ்வு
நிலைகெட்டுப் பாழாகிப் போதல் கண்டு
சோதி ஒளியானவனே இறைவன் - பொய்யர்
செய்த மதம் போகாதீர்; சாதி என்னும்
நீதியிலே மயங்காதீர்; சைவ மென்ற
பெருங் கருணை புகுந்திடவும் வாரீர் என்றான்.

அருட்சோதி வள்ளற் சொற் பரவா வண்ணம்
ஆணவத்தால் மதவெறியர் கூட்டுச் சேர்ந்து
"மருட்பா" என்றவர் சொன்ன அருட்பா தம்மை
மதியாமல் இகழ்ந்திட்டார்; தமிழர் உள்ளம்
இருட்டாக்கிச் சித்தாந்தம் அறியாவாறு
எழுதினர் பல பொய்மைக் கதைகள்; ஆனல்
அருட்சோதி வள்ளற்றம் கருணையாலே
அவையாவும் பொய்யெனவே அறிந்தார் மக்கள்.

விடிந்தது காண் தமிழினத்தின் புதிய வாழ்வு;
வீழ்ச்சியிலா எழுச்சி இது உண்மை; நம்மைக்
கடிந்தவர்கள் சைவத்தை மதமாய்ச் செய்த
கடுமனத்தார், சாதி மத வெறியர் ஓய்ந்தார்;
முடிந்தது காண் மருள் வாழ்வு; இராமலிங்கர்
முழங்கிய நற் சமரசமும் முளைத்ததாலே
ஒடிந்தது காண் கருணையிலாப் போலி ஆட்சி
உலகமெலாம் திருவருட்பா ஒலிக்கக் கேண்மின்.

# மலையக இளைஞர்கள்

எம். எஸ். கந்தையா

மலையக இளைஞர்கள் ஒரு குறிக்கோளற்ற நிலையில் உள்ளனர். இவர்களின் காலம் வீணாகக் கழிகிறது. இளைஞர்களின்பலத்தைத் திரட்டி பயன் படக்கூடிய ஆக்கவழிகளுக்கு உபயோகித்திட தொழிற் சங்க ஸ்தாபனங்கள் முன்வர வேண்டும். —ஆ-ர்.

பருவமும் காலமும் இன்றைய இளைஞர்களுக்கு உரியனவாகும். இன்றய இளைஞன் நாளைய தலைவன், என்பது உலகறிந்த உண்மை. இன்றய இளைஞர் குழாம் பிறவி எடுத்தது உண்டு களித்து, உறங்கி மடிவதற்கல்ல என்ற நோக்குடன் பருவத்தே பயிர் செய்தால் நாளைய தலைவனவது நிச்சயமே. "முயற்சி திருவினையாக்கும்" என்ற கூற்று ஒவ்வொரு இளைஞன் உள்ளத்திலும் வேரூன்றிப் பதிய வேண்டும். முயற்சியே ஒருவனை மேம்படச் செய்யக்கூடியது.

படித்த இளைஞர்கள் தொழிலுக்காக வெளி இடங்களை நாடி, பின்னர் மனமாற்றம் ஏற்படுவதோடு இன, மதமாற்றத்தையும் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். பிறந்த நாள் தொட்டு அன்பு ததும்ப மலையகத்தில் பழகிய தம் நண்பர்களை மறந்துவிடுகிறார்கள். ஒருசிலர் பெற்றார், உற்றாரை மறந்து தாம் கற்ற கல்வியை இழிவுபடுத்தக்கூடிய உடைமாற்றம், பழக்கவழக்கங்களில் மாற்றம், பண்பாட்டிலும் மாற்றம்காணக் கூடியதாக மாறிவிடுகிறார்கள்.

படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்கள் ஏதோ ஓரளவு மதிப்புடைய தொழில் கிடைக்கவேண்டும் என்றுள்ளனர். அவர்களின் திறமை குடத்திலிட்ட விளக்கைப்போல் இருப்பதற்குக் காரணம் பிரஜாவுரிமை இல்லாததுதான்.

படித்து வேலையின்மையால் தோட்டங்களில் வேலைசெய்பவர்கள் தாங்கள் கற்ற ஓரளவு கல்வி அறிவால் உத்தியோகம் தேடியும் அது கிடைக்காத நிலையில் தாங்களாகவே தோட்டத் தொழிலை நாடுகிறார்கள். தாங்கள் கற்றிருக்கும் கல்வியில் தக்க தராதரமின்றி அவதிப்படும் இவர்கள் செய்வதறியாது மலையகத்தையே சூழ்ந்துகொள்கிறார்கள். இன்று மலையகத்தில் இப்படிபட்ட இளைஞர்களை நாம் குறைவின்றி காணக்கூடியதாக இருக்கின்றது. ஒருபுறம் வயது முதிர்ந்த தங்கள் பெற்றோரின் நிலையும், மற்றொரு புறத்தில் குடும்பத்தை வழி நடத்திச் செல்லப் போதிய பொருளாதாரம் இல்லாத நிலையிலும் காணப்படுகிறார்கள். இருந்தும் இப்படிப்பட்டவர்களிலே அறிவு நிறைந்தவர்கள், ஆற்றலுடையவர்கள் இலை மறை காயாய் இருந்து வருவது பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். மலையகத்தில் இருந்துவரும் மன்றங்கள், இயக்கங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் இவர்கள் தலைமையில் அல்லது ஆலோசனையில்தான் இயங்குகின்றன.

மலையகத்தில் - கல்வி - அறிவற்று இருக்கும் ஏனைய இளைஞர் தாங்கள் தோட்ட தொழிலுக்காகவே பிறந்தவர்கள் என்று கருமமாற்றுகிறார்கள். தோட்டத்திலே ஒரு ஆசிரியரையுடைய பாடசாலை இருந்தும்

அதை ஏறிட்டும் பார்ப்ப தில்லை அப்பாவித்தனமான இவர்களின் நிலைமை உண்மையி லேயே இரங்கற்குரியது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந் நாட்டு இளைஞர்களிலேயே தங்கி இருப்பதால் இளைஞர்களின் நன்மைதரும் ஆக்கமுயற்சிகள் எல்லாவற்றிற்கும் ஊக்கம் கொடுப் பது அந்நாட்டின் கடமையாகும். துடிப்புணர்ச்சியுடையவர்கள் இளை ஞர்கள் என்று சொல்லப்பட்ட போதிலும் அனுபவசாலிகள் அவர் களுக்கு தக்க வழிகாட்டிகளாய் விளங்கி இளைஞர்களின் முயற்சி களுக்கு ஆலோசனை கூறி அவர்கள் திட்டங்களில் வெற்றியடையச் செய்வது கடமையாகும்.

மலையக இளைஞர்கள் மனம் போனபடி சந்தர்ப்பவாதிகளின் அரசியல், வர்க்கப் பிரச்சினைகளில் தலையிட்டுத் தங்கள் எதிர்காலத் தைப் பாழாக்கிக்கொள்ளாமல் தமது இனம், தமது வாழ்க்கை முறைகள், தமது தொழில் இவை களில் ஆர்வம்கொண்டு உழைப்ப துடன், கூடுமான அளவு கைத் தொழில் நிலையங்களை அமைத்து சிறு கைத்தொழில்களைச் செய்திட வேண்டும். வேலையில்லாத பலர் இதால் பயனடையலாம். இத்த கைய சிறு கைத்தொழில்களைக் கூட்டுறவுடன் மன்றங்களமைத்து அவற்றின் பொறுப்பில் நடைபெற வும் செய்யலாம்.

தோட்டத்தில் படித்த—அல்லது படிக்காத - பெயர் பதியமுடியாத வாலிபர்களும், குமரியர்களும் இத் தகைய கைத்தொழில்களால் பய னடைய முடியும்.

பற்பொடி, தயாரித்தல், தேயி லைத் தூள் காப்பித்தூள், மிள காய்த்தூள், மல்லி, சீரகம், மசா லைத்தூள், முதலியனவும், முகப் பவுடர் பூச்சுகள், குங்குமப் பொட்டுகள், முதலியவைகளையும், கிழங்குவகைகளையும் உண்டாக்கி அவைகளை நறுக்கி வற்றல் செய்து சிறு சிறு உறைகளில் அடைத்து விற்பனை செய்வதாலும், காய்கறித் தோட்டங்கள் செய்வதனுலும் பலன்மிக அடையலாம்.

படித்த இளைஞர்கள் இராப் பள் ளிக்கூடங்கள் நடத்திப் படிப்பில் லாதவர்களுக்கு எழுத்தறிவையும், முதிர்ந்தோருக்குக் கேள்வி ஞானத் தையும் ஊட்டுவதில் ஈடுபடலாம்.

வாலிபர்களின் உள்ளத்தில் தன் னம்பிக்கையை எழுச்சி செய்வதில் பொருள்படைத்தோர் நல்ல திட்டங்களை வகுத்துத் தருவதில் முன்நிற்கவேண்டும். தொழிற்சங் கங்களே சங்க வேறுபாடின்றி மலை யக இளைஞர்களுக்குச் சிறு சிறு கைத்தொழில் நிலையங்களை உரு வாக்கித் தருவதில் சிரத்தைகாட் டிடவேண்டும்.

---

நாம்காணும் அண்ட வெளி எல்லையில்லாதது. நமது கண்களுக் கெட்டிய தூரத்தை வைத்து நாம் உலகத்தையும், பிரபஞ்சத்தையும் அளக்க முடியாது. நாம் வாழும் பூமி இந்த அண்டவெளியிலுள்ள ஒரு கிரகமே. இதனைப் போல் பல்லாயிரக்கணக்கான பூமிகளும், சூரியன்க ளும் சந்திரன்களும் இந்த அண்டவெளியில் மிதந்து கொண்டிருக்கின் றன. நமது கண்களுக்குத் தெரியும் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு சூரியனென்றும் அவைகளைச் சுற்றி ஒரு பூமி வலம் வருகிற தென்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். ஒரு நட்சத்திரத்தை அடைய மனிதன் இந்தப் பூமியிலிருந்து புறப்பட்டால் சுமார் ஐம்பதிணுயிரம் ஆண்டுகள் பயணஞ் செய்தால்தான் கைகூடு மென்கிறுர்கள் விஞ்ஞா னிகள். இவ்வளவு பெரிய, எல்லையில்லாத வெளியை நாம் சிந்தித்துப் பார்த்திடத் துணியாததும் ஏனோ? மனிதனுல் அறிய வேண்டியன இன்னும் உள்ளன என்பதை இது உணர்த்துகிறதல்லவா! —சத்தி

# நேர்மை மேல் ஆணை

"சக்தீ"

தமிழுக்குக் கதி நீதான் தமிழா — வீரத்
தமிழனுக் கது அல்லால் வேறேது கதியே
அமுதத்தை வேண்டாமென்பாரோ— தமிழ்
அமுதுக்குச் சமமாக அமுதுண்டோ உலகில்
(தமிழுக்குக்)

நாற்பது இலட்சம் வயதாள் — அவள்
நாளும், பொழுதும் மலர்ந்திடும் கன்னி
ஏற்பவர் பாக்கியம் பெற்றார்—மற்றிங்
கெதிர்த்தவர் பாழாகிச் சாக்காடு உற்றார்
(தமிழுக்குக்)

உறவுக்குத் தமிழ் இங்கு காதல்— ஆன
உயிர்ப்புக்கும் தமிழின்பம் உணர்வூட்டும் மூச்சு
அறிவுக்கும் தெளிவுக்கும் தூய்மை — புது
ஆற்றலை, ஆக்கத்தை பிறப்பிக்கும் வேகம்
(தமிழுக்குக்)

வீரத்தில் தமிழினம் என்போம்—தமிழ்
விளங்கிடும் இடமெல்லாம் சுதந்திரம் மலரும்
பாரெல்லாம் தமிழினச் செம்மை— காணும்
பலமுண்டு வளமுண்டு அது ஒன்றே இன்பம்
(தமிழுக்குக்)

காட்டிக் கொடுப்பாரும் உண்டு— பெருங்
காரியவாதிபோல் நடிப்பாருமுண்டு
ஊட்டுவார் நஞ்சைக் கொணர்ந்து— அவர்
உறவாலே தமிழுக்குச் சுகமுண்டோ அதனால்
(தமிழுக்குக்)

அச்சத்தை அழித்திடத் துணிவாய் — உந்தன்
அன்னையின் மகிழ்வல்லால் உன் வாழ்வும் பெரிதோ
நிச்சயம் உனதாகும் வெற்றி— எந்தன்
நேர்மைமேல் ஆணை என் நெஞ்சத்தின் வாழ்த்து.
(தமிழுக்குக்)

கட்டுரைத் தொடர்......

# தேயிலைத் தொழில் துறை

(தொழில் கமிஷனர்) —லக்ஷ்மன் த. மெல்—

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய தொழிலாளர்களுக்கு 20ம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையிலும் தொழிற்சங்க இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்திடவில்லை. கல்வியறிவில்லாமையாலும், கண்காணிகளின் அதிகாரத்துள் கட்டுப்பட்டிருந்தமையாலும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங்கள் பற்றிய கருத்தை ஊக்கிட முடியாதிருந்தது. இதுமட்டுமல்லாமல், தோட்டச் சொந்தக்காரர்கள், உத்தியோகத்தர்கள், பிரித்தானிய காலனி ஆட்சி அதிகாரிகள் முதலியோர் இப்படியான இயக்கங்கள் ஏற்படுவதை விரும்பாததும் தகுதியான தலைமையைக் காணமுடியாதிருந்ததும் தொழிற்சங்கங்களை அக்காலத்தில் அமைத்திட முடியாதிருந்ததன் காரணங்களாகும்.

(முதலாவதாக தொழிற்சங்கங்கள் பற்றிய அறிவை கோ. நடேசய்யர்போன்றவர்கள் பிரச்சாரம் செய்தனர்:—என்ற குறிப்பு இந்த நூலில் இடம்பெற வில்லை)

ஆயினும் 1923ல். திரு. ஏ. ஈ. குணசிங்கா என்பவர் முதலாவதாகத் தொழிற்சங்கத்தை ஸ்தாபித்தார். இந்த இயக்கமே நாட்டின் பிற பகுதிகளுக்குப் பரவலாயிற்று. இதேகாலத்தில் அகிலஇலங்கை இந்தியத் தொழிலாளர் சங்கமும், இலங்கை இந்தியத் தொழிலாளர் சங்கமும் இந்தியத் தொழிலாளரின் நலவுரிமைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டன. இவை 1920ல் குறித்த உறுதியான தொழிற்சங்க இயக்கத்திற்கு அத்திவாரமாக அமைந்தன.

1929ல் ஏ. ஈ.குணசிங்கா அகில இலங்கை தொழிற்சங்கக் காங்கிரசை உருவாக்கிக் கிளை ஸ்தாபனங்களையும் திறந்துவைத்து தொழிற்சங்கவளர்ச்சிக்கு உரமூட்டினார்.

இவ்வியக்கத்தால் அடிக்கடி நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் அரசினதும் முதலாளிகளினதும் அநுதாபத்தைப் பெறவில்லை. தொழிற்சங்கத் தலைவர்களும், வேலை நிறுத்தம் செய்தோரும் கடினமான தொல்லைகளுக் காளானார்கள். வேலை நிறுத்தத் தூண்டுதல் செய்வது தடுக்கப்பட்டிருந்தது ஒரு சமயம் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தபோது 600 க்கு மேற்பட்ட வேலைநிறுத்தக்காரர்கள் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அடைந்தனர்.

கவர்னரின் தலையீட்டினால் அவர்கள் விடுதலையடைந்தனர். கருங்காலிகளை வேலை செய்யவேண்டாமெனக் கேட்டுக் கொண்ட தலைவர்களைப் பொலிசார் கைது செய்தனர். 31 தொழிற்சங்கங்களின் தலைவர்களும் தொழிலாளர்களும் இவ்விதம் பாதிக்கப்பட்டவராக இருந்தனர்.

தோட்டமுதலாளிகளும் புதிய தொழிற்சங்கங்களுக்குக் கருணை காட்டாதிருந்தனர். 1927ல் நடந்த துறைமுக வேலை நிறுத்தத்தின் போது, வேலைநிறுத்தத்திற்குப் பொறுப்பானவர்களை சிறையில் வைப்பது அல்லது நாடுகடத்துவது என்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. 1929ல் தொழிற்சங்கச் சட்டங்களுக்காக, டிராம் வண்டித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் சட்டசபையில் தொழிற்சங்கச் சட்ட அமைப்பின் முதல்படிவ ஆலோசனை எழுந்தது. ஆனால்

மீண்டும் அது கைவிடப்பட்டது. முதலாளிகளும் தமக்கென பலம் வாய்ந்த சங்கத்தை அமைத்து, தொழிலாளரின் இயக்கங்களைச் சந்திக்கத் தயாராகினர். 1929ல் முதலாளிகளின் சங்கத்திற்கும், அகில இலங்கைத் தொழிற்சங்கக் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இரு சாராரும் பேச்சுவார்த்தைகளால் பிரச்சினைகளைத் தீர்ப்பதென முடிவு காணப்பட்டது.

1930ல் மார்க்சிய வாதிகளால் குணசிங்காவின் தொழிற்சங்கத் தலைமைக்கு எதிர்ப்பு ஏற்படலாயிற்று. மார்க்சிய இளைஞர்கள் 1933ல் வெள்ளவத்தை நெசவு ஆலையில் ஒரு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். அது தொடக்கம் அவர்களும் தொழிற்சங்க இயக்கத்தைத் தொடரலாயினர். மார்க்சிய வாதிகளின் தொழிற்சங்கம் ஆரம்பித்த 3 ஆண்டுகளின் பின்னரே அவர்களின் அரசியல் கட்சியும் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அரசியல் கட்சிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் மிக மிக நெருங்கிய தொடர்புகள் ஏற்படலாயின. —தொடரும்.

# ஆதரவு தேடிடுவாய்

— எல். ஸ்ரீஸ்கந்தராஜா —

ஈழத்தின் நிலச் செழிப்பை
எழில் செய்யும் மாவலியே
ஈழத்தில் தமிழ்ப் பெருமை
எழுச்சிபெறச் செய்வாயோ!

வற்றாத பெரு நதியாய்
வளர்கின்ற மாவலியே
வற்றாத தமிழ்க் கடலில்
தினம் கூடும் திருப்பொலிவே

மலை மன்றச் சுனையாகி
மாநதியாய் உருவாகி
மலை நாட்டு மக்களெங்கள்
மனங்கலந்த மாவலியே

நெற்றி வியர்வை இந்த
நிலம் வடித்து மிக உழைத்தும்
பெற்ற பலன் என்ன உண்டு
பேசுவையோ மாவலியே

எங்கெங்கும் சென்றிடுவாய்
எம்மினத்தார் துயரகல
அங்கெல்லாம் உரைத்திடுவாய்
ஆதரவு தேடிடுவாய்

குறைவில்லா நிறை நதியாய்
குமுறி வரும் மாவலியே
முறை வழுவா நீதி பெற
முன் எழுந்தாய் நீ வாழி.

# நாம்தான் உண்டு

—சாரல் நாடன்—

வளமுடை நாட்டிலாட்சி
வரட்சியை நோக்கிச் சென்றால்
உளந்தளர்ந் துணவுக்காக
ஊரெல்லாம் அலைய நேர்ந்தால்
விளைபயன் யாதாமென்று
விளங்கிடும். வலிமைகொண்ட
இளைய நற்றோழரெல்லாம்
எழுந்திடில் வெறுமை பாழாம்.

ஏழையின் வாழ்வில் சற்று
இன்பத்தை அளிக்க வேண்டின்
பேழையில் பொன்னை வைத்து
பெருமையும் செய்யவேண்டாம்
வாழையின் பழத்தளவில்
வாய்நிறைக் கவளச்சோறே
ஏழையின் துயரம் போக்கும்
ஏற்புடை மருந்தேயாகும்.

வீட்டினில் காணும் சோர்வை
விலக்கிட மனையாள் உண்டு.
ஏட்டினில் காணும் சோர்வை
எடுத்திட எழுத்தருண்டு.
பாட்டினில் காணும் சோர்வைப்
புறத்திடப் புலவர் உண்டு.
நாட்டினில் நலிவைக் கண்டால்
நசுக்கிட நாம்தான் உண்டு.

# ஆசிரியருக்கு. . . கடிதங்கள்

துயர்தீர்க்க...

ஐயா,

'ஈழ நாட்டில் தேசிய வருமானத்தில் முக்கால் பங்கை ஈட்டித் தருபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்தான்' என்று தொழிற் சங்கப் பிரமுகர்கள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள் இன்னும் பல தரப்பட்ட பிரமுகர்கள், பேச்சாளர்கள் எல்லோரும் மேடைகளில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்கள். ஆனால் அந்தத் தொழிலாளி எந்தச் சூழ் நிலையில் வாழ்கின்றான், என்று ஆராய்ந்து அவனுடைய துயர் தீர்க்க முன்வருபவர்கள் மிகச் சிலரே. இவர்களிடமிருந்து விடுதலை பெற நம் மலையகத் தொழிலாளர்கள் ஓரணியின் கீழ் திரள வேண்டும். அப்போது தான் நம் மலையக மக்களின் எதிர் காலத்தை நல்ல முறையிற் செப்பனிட முடியும்.

க. செல்லையா
தலைவர், இளைஞர் இயக்கம்
பொகவந்தலாவை

வறுமைத்திணிப்பு...

ஐயா,

தெம்பிழந்து, தெளிவிழந்து, பசியோடும் பட்டினியோடும் போராடும் தொழிலாளர்கள் இன்றைய நாள் ஓடி ஒளிந்துவிட்டது, நாளைப் பொழுது நல்லதாக இருக்கக்கூடாதா என்றுஅன்றாடம்கனவு கண்டு காலத்தை ஓட்டுகின்றனர்.

திக்கெட்டும் தீவிரப் பிரச்சாரம் செய்யும் ஒரு சில சுயநலத்தொழிற் சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் இதனை உணர்ந்து தங்களின் சிந்தனைகளைத் திசைத்திருப்பியதாகத் தெரியவில்லை.

சில மனிதர்கள் வறுமையோடு பிறக்கின்றார்கள்; சில மனிதர்கள் வறுமையை அடைகின்றார்கள்; சிலர் மீது வறுமை திணிக்கப்படுகின்றது. "வறுமை திணிக்கப்படுகின்றது" என்னும் காலச் சக்கரத்தில் மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கை தொங்குகின்றது.

உலக நாட்டிலே தலைசிறந்த உழைப்பாளிகள் பட்டியல் ஒன்றை எந்த ஒரு அரசும் தயாரிக்க முன் வந்தால் அதில் இலங்கையில் வாழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்தான் முதலிடம் பெறுவர். வேறு ஒரு சமுகத்தினரால் இந்த நல்ல பெயரை தட்டிக் கொள்ளமுடியாது.

மலையக மக்களுடன் இரண்டறக் கலந்து அதை உற்றுப் பார்ப்பவர்களுக்கே உண்மை புரியும். தெரிந்தும் தெரியாதவர்களைப் போல் செப்படி வித்தைக்காட்டும் அரசியல்வாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

வறுமைத் திணிக்கப்படுகின்றது என்பதன் நோக்கம், தொழிலாளர்களின் வாழ்க்கை செலவு விடம் போல் ஏறும் அளவிற்கு அவர்களின் வருமானம் உயரவில்லை. அதற்குமாறாக வேலைநாள் குறைக்கப்பட்டு, பங்கீட்டரிசி வெட்டப்பட்டு, வயதுவந்த பிள்ளைகள் வேலைவாய்ப்பிழந்து வாடுகின்றனர். வறுமையின் அடித்தளத்திற்கே தள்ளப்படுகின்றனர்.

நாடெங்கும் மாடமாளிகைகள், அணைக்கட்டுகள், மின்சார நிலையங்கள், தொழிற்சாலைகள் எல்லாம் எப்படி அடுக்கடுக்காக முளைத்தன? இவை இலட்சக்கணக்கான உழைப்பாளிகள் சிந்திய வியர்வை. அந்த வழிவந்த உழைப்பாளிகளின் வாழ்வில் வறுமைத் திணிக்கப்படுகின்றது. இந்த இலங்கை நாட்டு அரசாங்கத்தினால் இந்த நிலையை மாற்ற முடியாதா?

ஏ. வீ. துரைசாமி
கிளைச் செயலாளர்
தொ. தே. சங்கம், பசறை.

# மாந்தரில் தெய்வம் மகாத்துமா

செல்வி யமுனு துரைராஜ்

காந்தி மகாத்துமா இந்த உலகத்தில் எளியாருக்காக வலியாருடன் தர்மப்போர் நடாத்தி வெற்றி கண்டார். அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்த காந்திமகான், மக்களின் ஒருமைப்பாட்டினுக்காகவே வாழ்ந்தவர். அவரது இலட்சியங்கள்யாவும் வள்ளலார் காட்டிய இலட்சியங்களாகவே திகழ்ந்தன— ஆ-ர்.

மகாத்துமா காந்தி உலகத்திற்கு அகிம்சாமுறைப் போரியக்கத்தை உருவாக்கித் தந்ததுடன் அந்தப் போரில் வெற்றி பெற்று உலகெல்லாம் போற்றும் உத்தமனுக விளங்கினுர்.

இருபதாம் நூற்ருண்டின் பெரும் பகுதி, காந்தி மகாத்துமனின் சத்தியப் போராட்ட இயக்கமாகவும், செயல்முறையில் அநுட்டிக்கும் அதிசிறந்த பயிற்சியாகவுமே கழிந்தது. சத்தியப் போரின் முடிவு இந்திய சுதந்திரம். அதைத்தொடர்ந்து ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பிரித்தானிய ஏகாதிபத்தியக் காலனி ஆட்சியின் காலம் முடிவுறத் தொடங்கியது.

காந்தி மகாத்துமா காட்டிய அஹிம்சா முறை அறப்போரினுல் ஆசிய ஆபிரிக்க மக்கள் அடிமைத் தளையை ஒடித்து விடுதலைக் குரல் எழுப்பி வெற்றி காண விழைந்தனர். பல நாடுகள் விடுதலையடைந்தன.

அண்ணல் காந்தியின் சத்தியப் போர் ஆபிரிக்காவில் முதன் முதல் ஆரம்பமாகியது. தமிழ் மக்களின் உண்மை உழைப்பும், உழைப்புக்கேற்ற ஊதியமும் இல்லாமல் அடிமைகளாக அல்லற்பட்டதைக் கண்ட மகாத்துமா அவர்களுக்காகவே முதலாவதாகத் தனது சத்தியப் போர்முறையைத் தொடங்கினுர்.

தனக்கென வாழாப் பெருந்தகை சாதாரணக் குடியானவனைப்போல உடைதரித்தார். ஆசிரம வாழ்வு நடத்தினுர். பட்டினி கிடந்தார். சிறைவாசம் செய்தார். உலகத்தையே தனது ஆத்மிக சக்தியால் வசிகரித்தார்.

தன்னைத்தானே வருத்திக் கொண்டு மக்களின் மூடபக்தியையும். சாதி மத பேதங்களையும் நீக்கிட ஒருமைப்பாட்டுடன் விடுதலைக்குரல் எழுப்பி வெற்றி காணவும் வழி வகுத்த வள்ளல் மகாத்துமா காந்தி.

அருட்சோதி இராமலிங்கப் பெருமான் காட்டிச் சென்ற இலட்சியங்களைத் தனது வாணுளில் கடைப் பிடித்து வெற்றி பெற்றவர் காந்தி. வள்ளற்பெம்மானுல் ஆரம்பிக்கப்பட்ட விடுதலை இயக்கம், காந்தி மகாத்துமாவினுல் நிறைவு செய்யப்பட்டது.

நிரபராதியான மக்களுக்குத் தாய்மையான வாழ்வும் ஆத்மிகப்பலமும் இருந்தால் சக்தியாக்கிரகப் போர் வெற்றி தருவதில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாது என்பதை நிருபித்தவர் மகாத்மா.

கருணைவள்ளலாக, இயேசுவைப் போல், புத்தனைப் போல், இராமலிங்கரைப்போல் வாழ்ந்தவர் மகான் காந்தி. தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து தன்னுயிரையும் மண்ணுயிருக்காக இழந்தவர் அந்த மகான்.

உரிமை கோரும் மக்கள் யாவரும் சக்தியாக்கிரகம் மூலமே ஆயுதப் படைவலிமைமிக்க எதேச்சாதிகார அரசுகளை அடிபணியவைத்திடலாம் என்ற உறுதியை ஊக்குவித்த காந்தி இந்திய விடுதலைக்காகத் தியாகமே இலட்சியமாகக் கொண்டு விளங்கினார். இந்தியாவில் போர் பந்தரில் 2.10 1869ல் பிறந்த காந்தி இலண்டனில் பாரிஸ்டராகத் தேறினார். இந்திய விடுதலைக்குமுன் ஆபிரிக்காவுக்கு சீவியத்திற்காகச் சென்றார். அங்கே நீக்ரோக்களையும், இந்தியர்களையும் வெள்ளைக்காரர் ஆட்சி அடிமைகளாக்கிவைத்திருப்பதைக் கண்டித்து சத்தியப் போராட்டத்திற்கு வித்தூன்றினார்.

இந்தியாவுக்குத் திரும்பிய காந்தி இந்திய விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். அவரது தியாகம் உலகத்திற்கே புதியதோர் ஒளியைத் தந்தது. "காந்தியின் நாடு" என்றால்தான் இந்தியா என்பதும் 'காந்தியின் மக்கள்' என்றால் அவர்கள் தான் இந்தியர் என்பதும் உலக நாடுகளுக்குத் தெளிவாகியது. அத்தகைய சிறந்த இடத்தை நமக்கு வாங்கித் தந்தவர் மகாத்துமா காந்தி இவரது பாவமன்னிப்புக் கொள்கைகள் அன்றைய இளைஞர் கூட்டத்திலிருந்த தீவிர சுதேசிகளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் காந்தி மகாத்துமாவைத் தெய்வப் புனிதனாகக் கருதிய இளைஞர்களே அவரது அன்பைத் தாங்கிக் கொள்ளும் பலமில்லாத நிலையில் தீவிர தேசபக்தியில் ஈடுபட்டனர். சுதந்திர இந்தியாவில் மதவேற்றுமைகள் தோன்றின. பகைவரை மன்னித்தார் காந்தி. ஒரு சிலர் காந்தியின் பாவமன்னிப்பால் இந்தியாவின் கண்ணியம் குறைந்துவிடலாம் என்றுஅஞ்சினர். இதனால் நத்துராம் விநாயக்கோட்சே என்ற காந்தி பக்தனே காந்தியைச் சுட்டுவிட்டான். அகிம்சையின் கர்த்தா இமய மலைக்குநிகரான பெருமையையுடைய மகாத்துமா காந்தி 31-1-1948ல் கொல்லப்பட்டார்.

காந்தி மகானின் கருணை காரணமாகவே பல்வேறு மதங்களின் ஒருமைப்பாடும் இந்தியாவில் வளர்ச்சியடைந்து வருகிறது. தேசியம் மதிக்கப்படுகிறது. உலகமெலாம் காந்தியக் கொள்கைகள் நடைமுறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஒரு சில தனவந்த நாடுகளின் தூண்டுதல்களால் யுத்தங்கள் ஆங்காங்கே நடந்துவந்தாலும், காந்தியுகம் அழிந்து விடவில்லை. மலையக மக்கள் காந்தி காட்டிய சத்தியப் போர் வழி நின்று தமது இழந்த உரிமைகளைப் பெற்றிடத் துணிந்திட வேண்டும்.

தொழிற்சங்கவாதிகளின் போட்டிகளால் மலையக மக்கள் தங்கள் ஒருமைப்பலத்தை உணரமுடியாதவர்களாக உள்ளனர். பாகுபாடுகளுடைய கட்சிகளால் அமைக்கப் பெற்றுள்ள தொழிற்சங்கங்கள் மலையக மக்களுக்கு முழுமையான சுபீட்ச வாழ்வைக் கொணர முடியாது என்பதை மலையக இளைஞர்கள் உணர்ந்து கொள்வதுடன், சுதந்திரமான, நடுநிலைத் தொழிற்சங்கங்களே அவர்கள் விடுதலைக்குக் காந்திய இயக்க அடிப்படையில் வெற்றி பெறச் செய்யலாம் என்பதனையும் பிரச்சாரப்படுத்திட வேண்டும் சந்தர்ப்பவாதிகளின் முன்னணிப் பிடிகளில் சிக்கித் தங்கள் சுதந்திரத்தை மேலும் இழந்துவிடாதிருக்க காந்தியம் வழிகாட்டுமென நம்புவோமாக.

# எது சோசலிசம்?

செ. வி. நாதன்

சோசலிசம் என்று திசை தொறும் கூக்குரல் எழுப்புகிறார்கள் பலர். சமரச வாழ்வு அதுதான் என்று சமயோசிதம்போல் அரசியல் வாதிகள் பேரவைகளில் முழங்குகிறார்கள். சோஷலிசச் சமத்துவம் காணுவதாகக்கூப்பாடுபோடுவோர் தாமும் சாதாரண மனிதனின் எளிய வாழ்வின் இன்னல்களை அனுபவித்திடாமல் மக்களின் வழிகாட்டியாகவோ தலைவனாகவோ ஆகிட முடியாது. மேல்வட்டத்திலிருந்துகொண்டு உல்லாசமான வாழ்வில் சுகித்திருப்போர் சோஷலிசம் பேசுவதில் பயனில்லை. அப்படியான சோசலிசம் மக்களை ஏய்த்துப் பிழைத்திடும் சூழ்ச்சி என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.— ஆ-ர்

சோசலிசம் என்ற சொல்லை முழங்காத— அதனை எழுதாத— பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும், அரசியல் வாதிகளையும் இன்று காண்பதரிதாக இருக்கின்றது. பல நாட்கள் பட்டினி கிடக்கும் பாட்டாளியும் வருக சோசலிசம் என்கின்றான். உண்டு மகிழ்ந்து பஞ்சணையில் துயில்கின்ற பணக்காரனும் அவர்களுடன் சேர்ந்து சோசலிசத்தை வாழ்த்தி வரவேற்கின்றான். மதவாதிகளும் ஆண்டவனைத் துதிப்பதை விட்டுவிட்டு ஒளிமயமான சோசலிசமே வருக! வருக! என்கிறார்கள். இப்படி எல்லோரின் நாவிலும் நர்த்தன மாடுகின்ற இந்தச் சோசலிசம் தான் என்ன?

இதிகாசங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்ட சொர்க்கத்தைக் கவிஞர்களும் கதை சொல்லுபவர்களும் அழகிய ஓவியமாக காவியமாக மக்கள் முன் வடித்துக்காட்டி மண்ணுலகில் நல்லது செய்து விண்ணுலகில் சொர்க்கத்தை அடைய வலியுறுத்தினார்கள். மக்களும் அச் சொர்க்கத்தை அடைய ஆசை கொண்டனர். ஆனால் இன்று அந்தச் சொர்க்கத்தின் சிறப்போ மங்கி மறைந்து விட்டது. ஆனால் அந்த இடத்தில்தான் இப்போது சோசலிசம் வசிக்கின்றது. உண்மையாக சொர்க்கம் என்று ஒன்று இருந்ததோ என்னவோ, மதவாதிகள் அந்தச் சொர்க்கத்தை மக்கள் நம்பும்படி செய்தனர். அதன்மூலம் சுரண்டலையும் தம் சுகபோகத்தையும் அநுபவித்தனர்.

அதைப் போன்றே இன்று ஆள வந்தோரும் அவர்களின் அடிவருடி வயிறு வளர்க்கும் ஒரு கூட்டமும் சோசலிசம் பேசியும் எழுதியும் மக்களை மயக்கத்திற்குள்ளாக்கி தம் சுகபோகங்களை அநுபவித்து வருகின்றனர்.

சோசலிசம் ஒரு அரிய சமரசத் தத்துவம்— "எல்லார்க்கும் எல்லாம் என்ற உயர்ந்த கருத்தை வலியுறுத்தி நிற்கும் அன்றாட வாழ்வின் நியமம். சமரச வாழ்வின் தனித்துவம். வாழ்வில் ஒருமைப் பாட்டினை ஊக்கும் ஒரு இலட்சியம். ஆனால் இன்று சோசலிசம் பேசுவோர், தமது பெயரும் புகழும் மக்களிடம் பரவவேண்டும் என்ற நினைப்பில் ஏதோ பேசுகிறார்களேயல்லாமல் நடைமுறையில் கடைப்பிடிப்பதைக் காணோம்.

ஒருமுறை இயேசு பெருமானை

அணுகிய ஒருவன் போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டானும் அதற்கு அவர் பிறன் மனை நயவாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்றாராம்- அதைக் கேட்ட அவன் இவற்றை எல்லாம் சிறுவயது முதலே நான் பின்பற்றி வருகிறேன் என்றானும் அதைக்கேட்ட அவர் அப்படியானால் இன்னும் ஒரு குறை இருக்கிறது. உன்னிடம் இருப்பவற்றையெல்லாம் ஏழைகளுக்குக் கொடு அப்போது பரலோகத்தில் உனக்குப் பொக்கிசம் உண்டாயிருக்கும் அப்புறம் என்னைப் பின்பற்றி வா என்று கூறினாராம். இதைக் கேட்ட அவன் பெரும் கவலை கொண்டான். ஏனென்றால் அவன் பெரும் பணக்காரன்.

இன்று பலர் சோசலிசத்தைப் பற்றிப்பேசுவதைக் கேட்கும்போது அன்று இயேசு பெருமான் கூறிய இந்த வாக்கே நினைவிற்கு வருகின்றது. தியாகத்தைப்பற்றி கிஞ்சிற்றும் சிந்திக்க முடியாதவர்கள் தமது அன்றாடம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டே போவோர்கள் ஒரு நாளும் சோசலிச அரசை அமைக்க முடியாது.

ஒருமுறை மகாத்மா காந்தியிடம் ஒரு சிறுமி "பாபு, நீங்கள் சட்டை போட்டுக் கொண்டால் என்ன? என் அம்மாவை உங்களுக்கு ஒரு சட்டை தைத்துக் கொடுக்கச் சொல்லட்டுமா என்று கேட்டாள். அதற்கு அவர் ஓ, போட்டுக் கொள்கிறேன் ஆனால் எனக்கு நாற்பது கோடி சகோதரர்கள் இருக்கிறார்கள் அவர்கள் எல்லோருக்கும் சட்டை தைத்துக் கொடுக்க உன் அம்மாவினால் முடியுமானால் நானும் சட்டை போட்டுக்கொள்கின்றேன் என்றார்.

ஆமாம் அவர் ஒரு சோசலிஸ்ட் உண்மையான சோசலிஸ்ட். ஏழைகளின் துன்பத்தைத் துடைக்க முயன்றார். தம்மால் அது முடியாத போது தானும் அவர்களது துயரத்தைப் பகிர்ந்து கொள்ள அவர்களைப் போல் ஆனார். ஈற்றில் வெற்றியும் கண்டார். அதிகாரத்தை ஏற்று நடத்துபவன் மனிதனே முதலில் அவன் திருந்த வேண்டும். அதற்காகத் தன் வாழ்நாளை அவர் அர்ப்பணித்தார். அகப்புரட்சியை செய்து கொண்டே புறப் புரட்சியையும் செய்தார்.

ஒரு நாள் ஒரு தொண்டர் அவரை நோக்கி "பாபுஜி, சோசலிசத்தை எப்படி அடைவது என்று கேட்டார். அதற்கு மகாத்துமா "அது எளிது உம்முடைய வாழ்க்கையை நீர் மாற்றியமைத்துக் கொண்டால் அப்போதே சோசலிசம் தொடங்கி விட்டதாகப் பொருள். அது எப்படி என்றால் இலக்கத்தில் ஒன்று என்று எழுதுவதைப்போல் ஆகும். இந்த ஒன்று என்ற இலக்கம் இருந்தால் இதன் பின் பூஜ்யங்களைச் சேர்த்துக் கொண்டே போகலாம். அதனால் மண்ணின் மதிப்பும் மனிதனின் நிலையும் உயர்ந்து கொண்டே போகும். இப்படிச் செய்யாமல் முதலில் வெறும் பூஜ்யம் மட்டும் இருந்தால்— அதாவது யாரும் தத்துவப்படி நடக்கா விட்டால் பின்பு எத்தனை பூஜ்யங்களைச் சேர்த்தாலும் அவற்றின் மதிப்பும் பூஜ்யமாகவே இருக்கும் அவற்றை எழுதுவதற்காகும் நேரமும் அவை எழுதப்படும் காகிதமும் வீணாகும்."

காந்தியின் வாழ்க்கை விளக்கம் சோசலிசத்தின் எடுத்துக்காட்டு, இதன் படி நமது நாட்டு சோசலிசவாதிகள் யார் என்பதை கண்டுகொள்ளலாம். சோசலிசத்தைப்பற்றி இவர்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டால்போதும் அதுவே மக்களுக்கும் சோசலிசத்திற்கும் அவர்கள் செய்யும் பெரிய தொண்டாகும்.

# சட்டங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

முன்னாள் உதவித் தொழில்கமிஷனர் **ஜி. ஏ. ஞானமுத்து**

1912ம் ஆண்டின் இல:9. வைத்தியத் தேவைச்சட்டம். இதன்படி, அரசும், தோட்டமுதலாளிகளும் தொழிலாளியின் சுகாதாரத்தைப் பேணவேண்டும் என்பது. (இந்தச் சட்டம் நாலுதடவை திருத்தம் செய்யப்பட்டது. 1956ல் 226ம் அதிகாரத்தை 1957ம் ஆண்டின் 46ம் இலக்கச் சட்டப்படியும், 1958ம் ஆண்டின் 35ம் இலக்கச்சட்டப்படியும், 1966ம் ஆண்டின் 2ம் இலக்கச் சட்டப்படியும் திருத்தப்பட்டது)

இந்தத் திருத்தங்களினால் தோட்டங்களுக்கு மாவட்ட மருத்துவ சாலைகளை ஸ்தாபித்தாலும் மாவட்ட மருத்துவர்கள், மருந்து கலக்கும் உதவியாளர்கள் முதலியோரை நியமிக்கப்படுதலும் குறிக்கப் பட்டுள்ளது.

**மருத்துவ அதிகாரிகளின் பணிகள்:—**

(அ) தோட்டத்துரையின் அழைப்பை ஏற்று சுகவீனமான தொழிலாளியினைப் பார்ப்பதும், அவசியமானால் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அங்கே கவனிப்பது:—

(ஆ) மற்றும் பின்வரும் பணிகளை வழமையான தாக்குவது:—

(1) தத்தம் மாவட்டத்திலுள்ள தோட்டங்களுக்கு இடையிட்ட காலங்களில் சென்று தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரத்தைக் கவனிப்பது (அல்லது தம்மால் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டவரை அனுப்பிப் பார்வையிடச் செய்தல்)

(2) அந்தத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் சுகத்தைச் சோதிப்பது, அவர்களுக்கு அமைப்பால் குத்தியுள்ளதா எனக் கவனிப்பது,

(3) ஒரு ஆண்டுக்குக் குறைந்த குழந்தைகளின் சுகத்தைக் கவனித்து தோட்டத்துரைக்கு அந்தக்குழந்தைகளின் ஆகார வசதிகளைப் பற்றி அறிக்கை தருவது,

(4) எந்தத் தொழிலாளியும் மிகவும் சீக்காளி எனக் கண்டால் வைத்திய சாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்வது,

(5) தொழிலாளரின் சுற்றுவட்டம் சுகாதார மற்றதாக இருப்பினும், அவர்களின் சுகம் பாதிக்கப்பட்டிருப்பினும் அதனைக் கவனித்து ஆவன செய்திடத் தோட்டத்துரையிடம் அறிதலும்,

(6) உயர்தர சுகாதார அதிகாரியிடம் இதுபற்றிய பூரண அறிக்கை சமர்ப்பித்தலும், ஆகியனவாகும்.

**தோட்டத்துரையின் பணிகளாவன:—**

(1) தோட்ட லயங்களைச் சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் வைத்திருப்பது.

(2) தோட்டத்தில் சுகமில்லாமலிருப்பவர்களைப் பற்றி உடனுக்குடன் அறிந்து என்ன செய்வதென்பதை ஆராய்ந்து அதற்கொப்ப நடவடிக்கை எடுப்பது

(3) மருத்துவ அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் சுகவீனத் தொழிலாளியை வைத்திய சாலைக்கு அனுப்புவது.

(4) மிகவும் ஆபத்தான வியாதியானாலும், அல்லது விபத்தானாலும் மாவட்ட மருத்துவரை அழைப்பது

(5) தோட்டத்தில் நிகழும் பிறப்பு இறப்புபற்றிய 48 மணிநேரத்

துள் மாவட்ட வைத்திய அதிகாரிடம் அறிவிப்பது.

(6) ஒவ்வொரு பெண் தொழிலாளிக்கும் தோட்டத்து கணக்கில் வீடு வசதியும், பிள்ளைப்பேறு வசதிகளும், அரிசியும், அல்லது பதிலாக வேறு உணவும், பணமும் பிள்ளைப்பேறு நடந்த 1மாதத்திற்கு வேலைக்குப் போகாதிருக்கவும், வாய்ப்பும் அளிப்பது. 1மாதத்திற்கு முன்னதாகவே வேலைக்குப் போவதானால் மாவட்ட அதிகாரியின் உத்தரவை அனுசரித்து வேலை கொடுக்கப்படவேண்டுமென்பது.

(குறிப்பு) வர்த்தமானி அறிக்கை 25. 6. 65ன் 14,433ன்படி, பிள்ளைப் பேற்றின் பின் அந்தப் பெண்ணுக்கு வாரத்திற்கு ரூ2/-ம் தின சரி 12அவுன்ஸ் அரிசியும் கொடுக்கப்படல் வேண்டும். குழைந்தைப் பேறு உபகாரச் சட்டத்தின் கீழ் உதவி பெறுவதாக இருந்தால் மேற்சொன்ன தோட்ட உதவி கொடுபடமாட்டாது.

(7) தோட்டத்தில் வசிக்கும் 1 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு நல்லுணவு, சுகாதாரம் முலலியவைகளை, மருத்துவ அதிகாரி கூறுவதுபோல் அளிப்பது.

(8) மருத்துவ அதிகாரியின் ஆலோசனைப்படி ஒருவருடத்திற்கும் குறைந்த வயதுள்ள பிள்ளைகளுக்குப் பால் வழங்குவது முதலியனவாகும்.

தோட்டத்துரை, அரசாங்கத்திடமிருந்து குறைந்த செலவில் மருந்துகளையும், வைத்திய உதவியைப் பெறுவதற்கும், தோட்டத்தில் வைத்தியசாலையிலிருந்தால் குறைந்த செலவில் மருந்துகளைப் பெறுவதற்கும் வாய்ப்புண்டு.

கண்காணிகளும், தோட்டத்தில் ஏற்படும் பிறப்பு, இறப்பு, சுகவீனங்கள் பற்றி துரைக்கு அறிவித்திடவேண்டும்.

தொழில் கமிஷனரால் இந்தச் சட்டங்களின் நிர்வாகம் நடைபெறவில்லை. மாவட்டவைத்தியஅதிகாரிகளினால் நிர்வகிக்கப்படுவதால் அவர்களே தொழிற்கமிஷனருக்கு இதுபற்றிய அறிக்கைகளைத் தரவேண்டும்.

சுகாதார அமைச்சருக்கு தொழிலாளர் பிரதிநிதித்துவம் அடங்கிய வைத்தியக் கமிட்டியும் அறிக்கை தரவேண்டும்.

குறிப்பு: இந்தச் சலுகைகள் தோட்டத்தில் வேலைசெய்பவர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் வேலையற்றிருப்பவர்களுக்கும், தோட்டத்தில் வசிக்கும் உறவினர்களுக்கும் உரியதாகும். (தொடரும்)

— எங்கும் எப்பொருளிலும் வியாபித்துள்ள, விவரிக்க முடியாத, அறிவுக்கு எட்டாத ஒரு மர்மமான சக்தி இருக்கிறது. கண்ணால் காண முடியாவிட்டாலும் இந்தச் சக்தியை நான் உணருகிறேன்; எனினும் அதை நிரூபிக்க முடிவதில்லை. ஏனெனில், எனது புலன்களின் மூலம் நான் உணரக் கூடிய பொருள் அல்ல அது. அது புலன்களுக்கு அப்பாற் பட்டதாக இருக்கிறது.

— மகாத்துமா காந்தி

— உழைப்பவர்களை ஏய்த்து வாழும் உலகம் இது. ஏய்ப்பவர்களே உழைப்பாளிகளின் பாதுகாவலராகி விடும்போது உழைப்பவர்கள் யாரையும் நம்ப முடியாதவர்களாகி விடுகின்றனர். ஆகவே, ஒவ்வொரு உழைப்பாளியும் தன்னைத்தானே வழிநடாத்திக் கொள்ளும் வகை யறிய வேண்டும். தன்கையே தனக்குதவி என்ற முது மொழியை உழைப்பாளி மறந்திடக் கூடாது. உயர்விலும் தாழ்விலும் தனது உழைப்பே பயன்தரு மென்பதை நம்பிடவேண்டும்.

— சக்தி

# ஒரு கவிஞனின் துயராற்றுமை . . .

அம்மா என்றுள்ளுணர்வு அழைத்தினிது அமைதிபெற
அம்மா என்னுற்ற தெய்வம் அருகிலையே— அம்மா
அம்மா என் றெப்போதும் அழைத்தவாயிப்போது
அம்மா என்றுரரை யழைக்கும்?

ஈர் ஐந்து திங்களாய் எனைச் சுமந்து பெற்றெடுத்துச்
சீர் தந்து வாழவைத்த செந்தமிழ்த்தாய்—பேர்தழைக்க
பாவி நான் யாதே பயன் செய்தேன் எந்தாயின்
ஆவி பிரிந்திடா முன்?

தள்ளாமை வாட்டித் தடுமாற்றத் தன்னுறுதி
உள்ளத்தைக் காத்தும் உடல் நலிந்தும்— முள்ளொத்தப்
பாய்மேற் புரண்டும் பரிவினால் துயர் சகித்த
தாய்க் கேதே செய்தேன் தவம்?

வாய்க்கும் அரிசியிட்டென்? மண்ணீர்க்குட முடைத்தென்?
தாய்க்குச் சிதைமேலாய்ப் பால் தெளித்தென்?—தூய்க்க
எள் நெய்முழுக்கெடுத்தென்? எந்தாய் வருவரோ?
உள்ளுணர்வும் சாந்தி யுறுமோ?

பால—ஐயா என்று பரிந்தே அழைத்த வாய்
ஞாலமினி பேசாது நானறிவேன்— சீலமிகு
தாயார் தமக்கே தடந்துணையாய்ப் போகாத
சேயானேன் கல்லோ என் சித்தம்?

இப்பிறப்பில் சுதந்திரத்தை எந்தமிழின் புகழ் ஒளியைத்
தப்பாது ஊக்கு வித்துத் தாங்கிய தாய் — செப்பரிய
இப்பிறப்பை நீத்தாரே எக்காலத் தெங்கே யான்
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

காணும் கலைகளிலே கவிதைக் கருவினிலே
காணுவனோ எந்தாய்க் கருணையுளம்? —ஊனுடலம்
உள்ளவரை அன்னை உறவை யுணர்வேனோ?
வெள்ளைமலர்த் திருவே நீ விளம்பு.

சாந்தி பெறும் ஆன்ம சமரசப் பொதுவினிலே
ஏந்தும் அருட் சோதி இறை வடிவிற் — போந்து
என்றும் அழியாதெழில் ஒளியாய் விளங்குமகா
மன்றிருப்பார் ஒன்றென என் மாதா.

1891 ……. 7 -10- 1973

1830-முதல் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கை நாட்டைப் பொன் கொழிக்கச் செய்து, இந்த நாட்டின் எண்திசைகளிலும் எளிதில் பயணஞ் செய்யக்கூடிய நீண்ட வழிகளையும், பெரும் பாலங்களையும், ரயில் ரோடுகளையும், சுரங்கங்களையும் அமைத்து, ஆயிரக்கணக்கானவர்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இந்த நாட்டுக்காக இழந்து, இந்த நாட்டவரின் நல்வாழ்வுக்காக உழைத்து இன்னலுற்பட்டுக் கண்ணீர் வடிக்கும் சரித்திரம் இது. வண. பிதா ஆஞ்சிலோ ஸ்டெஃபெனிஸி எஸ். ஜே. அவர்களின் உள்ளத்தில் பதிந்துபோன துயரச் சரிதைகளில் இதுவும் ஒன்று.

—ஆ-ர்

தொடர் கட்டுரை

# இலங்கைத் தோட்டங்களில் இந்தியத் தொழிலாளர்கள்

வண: பிதா ஆஞ்சிலோ ஸ்டெஃபனிஸி எஸ். ஜே.

இலங்கையில் கோப்பி, தேயிலை, றப்பர் நடுகையின் சரிதக் குறிப்புப் பொறித்த செப்புத் தகடு கொழும்பிலுள்ள துரைமார் சங்கக் காரியாலயத்தில் உள்ளது. 1824ல் இலங்கையில் கம்பளை சின்னாப் பிட்டியாவில் முதன் முதலாக கோப்பி பயிரிட்ட தோட்டப் பயிர்ச்சி செய்கையின் தந்தை எனக் கருதப்படும் ஜோர்ஜ் பர்ட் நினைவாகவும் 1866ல் அஸ்ஸாமிலிருந்து தேயிலை விதைகளைக் கொண்டு வந்து இலங்கையில் முதலாவதாக லூல்கொந்தரத் தோட்டத்தில் தேயிலை உற்பத்தி செய்த ஜேம்ஸ் டெய்லர் நினைவாகவும் 1875ல் தென் அமெரிக்காவிலுள்ள தபாகொஸ்ஸிலிருந்து ஹவ்யா பிரஜைிலன்சிஸ் என்பதன் விதைகளைச் சேகரித்து இலங்கையில் றப்பர் நடுகை செய்த ஹென்றி விக்ஹம் நினைவாகவும் இந்தச் செப்புத்தகடு சான்று பகருகிறது. ஆங்கிலேயர் வருகைக்கு முன் டச்சுக்காரர்கள் கறுவாப் பயிர் செய்தனராயினும் அது வளர்ச்சியடைந்த தொழிலாகவில்லை. பிரித்தானிய ஆட்சியில்தான் தோட்டத்துப் பயிர்த்தொழில் வளர்ச்சியடைந்தது.

பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல் விவசாயம் நடைபெற்றதாயினும் பல காடுகளை அழித்து கோப்பி நடுகையும் செய்யப்பட்டது.

தொடர்ந்து நீண்ட தார்ரோடுகளும், ரயில்ரோடுகளும் நாடுமுழுவதும் போடப்பட்டன. இந்த ரோடுகளினால் நாட்டு ஒருமையும் அரசியல் ஒருமையும் முதலாவதாக இணைந்தது எனலாம்.

கலாநிதி அரசரத்தினம் கோப்பி சகாப்தத்தைக் குறிப்பிடும்போது (1830—1870) நாலு தலைமுறைகளாக கோப்பித்தோட்டத் தொழிலுக்கு வகுக்கப்பட்ட முறைகள் பலன் மிகத் தந்ததுடன் பொதுவாக தேசத்துப் பொருளாதாரத்தைப் பெருக்கிட உதவுவதாகவு

மிருந்தது. அதே முறைகள்தான் இன்று வரை கையாளப் பட்டும் வரப்படுகின்றன.

"வர்த்தகச் சீரடைவும், நாட்டுக்குள் வந்த மூலதனங்களும் முதலாளித்தத்துவத்திற்கு அத்திவாரமாக அமைந்தன. "முதலாவதாக பெரும்பான்மையான தோட்டத் துரைகளும் சிறு சிறு முதலாளிகளும், முன்பணம் அல்லது கடன் பெற்றுத் தோட்டம் நடத்துவராகவு மிருந்தனர். இந்தக் கடன்களுக்காகவே வங்கிகள் அமைக்கப் பட்டன. அதனுல் வங்கிகளும் விநியோக ஸ்தாபனங்களும் கொழும்பில் திறக்கப்பட்டன. இந்த வங்கிகளும், விநியோக ஸ்தாபனங்களும் முழுக்க முழுக்க வெளிநாட்டவர்களினுல் நடத்தப்பட்டன.

இலங்கை வர்த்தகம் சர்வதேசிய பொருளாதாரத்தால் இயங்கலாயிற்று. உலகச் சந்தையின் கவனம் இலங்கையில்லயித்தது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலை மாற்றங்கள் உலகச்சந்தையையும் ஈர்க்கலாயிற்று."என்கிருர். (ஆதாரம். கலாநிதி எஸ் அரசரத்தினம் இலங்கை 1964 பக்கம் (158—159)

கண்டிச் சிங்களவர்களும் காடழிப்பு வேலையில் ஈடுபடலாயினர். அவர்கள் தோட்டத்துக் கடும் உழைப்பில் ஈடுபடாதிருந்தமையால், தென் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

ஆயிரக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் சேது சமுத்திரத்தைக் கடந்து இங்கு வரலாயினர். தேசத்தில் ஏற்பட்ட வறுமையும், நீரில்லா நிலமும், கண்காணிகளின் ஆசை காட்டிய வற்புறுத்தல்களும். இவர்களை இலங்கைக்கு வரச் செய்தன.

1834 முதல் 1859 வரையில்903, 557 பேர்களும் (810,239 ஆண்கள்-64317 பெண்கள்) பலபிள்ளைகளும் இலங்கைக்கு வந்தனர். அதே காலத்தில் 449180 பேர்கள் (442, 413 ஆண்கள்—18,405 பெண்கள் 7290 பிள்ளைகள்) இந்தியாவுக்குத் திரும்பினர் (ஆதாரம்: பர்கஷன் கொமன் பிலேஸ் நூல்: 1861)

கோப்பிப் பறிக்கும் காலத்திலும் (ஆகஸ்ட்டு நடுப்பகுதி முதல் நவம்பர் முதற் பகுதிக்குள்) இலங்கைக்கு வரும் தொழிலாளர்கள், இந்தியாவில் அறுவடை காலத்திற்குத் திரும்பி விடுகிறவர்களாகவிருந்தனர்.

இலங்கைக்கு இந்தக் காலங்களில் குடியேறி வந்த தமிழ்த் தொழிலாளர்களின் எண்ணற்ற துன்பங்களை எழுத்தால் விபரிக்க முடியாததாகும்.

தென்னிந்தியாவிலிருந்து புறப்பட்டுத் தலைமன்ஞர் அல்லது மன்ஞர் தீவிற்கு வந்து, மலேரியாச் சுரம் பரவியிருந்த காடுகளினூடாகக் கூட்டங் கூட்டமாக மாத்தளை வரையும் அவர்கள் சென்றனர்.

ஏறத்தாழ 130 மைல்கள் பயணஞ்செய்து தங்குமிடமில்லாமலும், குடிநீர் கிட்டாமலும் நீண்ட வழிப் பயணத்தில் அவர்கள் பட்ட துன்பம் மிகக் கொடியதாகவிருந்தது.

கண்டி மலைகளிலே ஆயிரக்கணக்காஞேர் மரணத்தின் வாய்ப்பட்டனர். மருந்து - சுகாதார வசதிகளில்லாமல் மாண்டவர் பல ஆயிரம்.

தோட்டங்களில் சுகாதாரமற்ற குறுகியக் குடிசைகளிலே இடவசதி இன்றி பலர் மாய்ந்தனர். வழிகளிலெல்லாம் நோயால் மடிந்தவர்களையும் மரணவஸ்தையில் துடித்தோரையும் காணமுடிந்தது. (இலங்கை விவசாயச் சபையின் மகஜர்-ஜுலை, டிசம்பர் ... பக்கம் 106-137). 1841 லிருந்து 1949 வரையில் ஏறத்தாழ 70,000, அல்லது 25% சத வீதம் குடியேறிய

பல தொழிலாளர்கள் உயிர் துறந்தனர். (இலங்கை ஒப்சேர்வர் 1849·) ஆனல் கோப்பித்தொழில் வளர்ந்தது. அது 1870ம் ஆண்டு வரையில் அதிர்ஷ்ட தேவதையாகவே திகழ்ந்தது. 1889ல் கோப்பித் தொழில் வீழ்ச்சியடையலாயிற்று. இந்த வீழ்ச்சி 1866ல் கோப்பி இலைக்கு ஏற்பட்ட நோயாலாகும்.

1840ல் சுரம்போல் பரவிய கோப்பி நோய் 1870ல் பிளேக் நோயைப் போலாகி மறைந்தது. (லுடோவிச்—இலங்கையின் புதிய சரித்திரம்)

இந்த அழிவைக்கண்ட தோட்டத் துரைகள் தேயிலையை வளர்க்கத் தொடங்கினர்கள். தொடக்கத்தில் ஒரு சில தோல்விகள் ஏற்பட்டாலும், இலங்கை மண்ணில் தேயிலை உற்பத்தி பரவலாக்கப்பட்டது. 1849ல் கூடுதலான நிலத்தில் தேயிலை வளர்க்கப்பட்டது.

(தொடரும்)

## வீழ்த்திவிட்டார்

குறிஞ்சி அ. பாலகிருஷ்ணன்

நாடுவிட்டு நாடு வந்தோம்
நல்லாழ்வு வாழவேன்றே
பாடுபட்டோம் பல்லாண்டு
பசுமை சூழ் மலையகத்தில்
ஈடுவைத்தோம் எம்முயிரை
ஈழத்தின் வளஞ்சிறக்கக்
கேடுற்ருேம் நன்றிகெட்டார்
கொடுஞ்சட்டக் கொக்கரிப்பால்

கண்ணிருந்தும் குருடர்களாய்க்
காதிருந்தும் செவிடர்களாய்
விண்ணுயர்ந்த பக்தியினல்
வீழ்ந்திட்டோம் வீழ்த்திவிட்டார்,
மண்ணிலின்பம் அத்தனையும்
மகிழ்ச்சியுடன் யாம்படைத்தும்
மண்ணுரிமை யாதுமில்லா
மனிதர்களாய் ஆகிவிட்டோம்.

## மாதிறம் பெற்றனரோ !

—வேதமுத்துப்புலவன்

மாதிறம் பெற்றனரோ—வாழ்க்கைச்
சூத்திரம் கற்றனரோ!

நித்தம் உழைத்தவர் செத்துப் பிழைத்திட
நத்திப் பிழைத்தவர் சித்தம் மகிழ்ந்திட

தத்துவம் கண்டனரோ—பெரும்
வித்தைகள் கொண்டனரோ!

ரத்தம் பொலிந்தவர் மெத்த வருந்திட
சுத்தச் சோம்பலில் மெத்த மகிழ்ந்தவர்

தத்துவம் பேசிடவோ—ஏழை
செத்தினி மாண்டிடவோ!

சொத்துச் சுகத்தினில் சித்தம் வைத்திட
மெத்தைப் படுக்கையில நித்தம் மகிழ்ந்திட

மாதிறம் பெற்றனரோ—வாழ்க்கைச்
சூத்திரம் கற்றனரோ!

★திறமையைச் செயலால்தான் காட்ட முடியும். திறமை யுடையவர்களைச் செயல்படவிடாத படிச் செய்திடும் தடைகளை நீக்குவதும், உரிமைகளை வழங்குவதும் நடுநிலை ஜனநாயகக் கோட்பாடாக அமைந்திட வேண்டும். அதுவே நாட்டின் வளர்ச்சியைக் காத்திடும்.

★சக்தியாக்கிரகம் என்பதே வலியாரின் எதேச்சாதிகாரத்தை எளியார்கள் தமது சகிப்புத் தன்மையால் முறியடிப்பதாகும். இந்தப் போர் முறை மகத்தானது. சாத்வீகப் போராட்டத்தால்தான் குடிமக்கள் இழந்த உரிமைகளைப் பெறமுடியும்.

# தொழிலாளியின் தேவை

— த. அய்யாத்துரை —

தொழிலாளரின் தேவைகளில் முக்கியமானது உணவு, உடை, வசிப்பிடம். இந்த மூன்று வசதிகளேயும் செய்து தராத அரசும், முதலாளிகளும், தொழிலாளர்களை உழைத்திடக் கூறி வற்புறுத்த முடியாது. தொழிலாளிக்கு பசியில்லாமலிருந்தால்தான் அங்கு தொழில் வளர முடியும். பட்டினிப் பட்டாளத்தாலும் பலாத்கார உழைப்பாலும் நாடு பயன் பெறப்போவதில்லை என்கிருர் கட்டுரையாளர்.

—ஆ-ர்

தொழிலாளியின் தேவைகளை ஆராய்ந்து பார்ப்போமானுல் பட்டியல் நீண்டுவிடும். தொழிலாளியின் அடிப்படைத் தேவைகளை மட்டும் பார்த்தால் அது உணவு, உடை, வீடு, என்று கூறிவிடலாம். முதலில் இந்த தேவைகளைப் பற்றி ஆராய்வோம். உயிர்வாழ மிக முக்கியமாக இருப்பது உணவு. உழைப்பவனின் உணவு உழைப்புக்கேற்ற சக்தி நிறைந்ததாக இருக்கவேண்டும். சத்துள்ள உணவுதான் தொழிலாளிக்கு சக்தியையும், ஆரோக்கியத்தையும் தரமுடியும்.

மலேயேறி பாடுபடும் தாய்மார்களை எடுத்துக்கொள்வோம். பச்சிளங் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கவேண்டியவர்கள், பல குழந்தைகளுக்குத் தாயாகிப் பல வீனப்பட்டவர்கள், கற்பிணிகள் ஆகியோரைப் பார்க்கின்ருேம். நாள் பூராவும் கொழுந்துக்கூடையின் சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கவேண்டியுள்ளது. அந்தச் சுமையுடனேயே செடிச் செடியாக ஏறி இறங்கி இரண்டு கைகளாலும் கொழுந்தைக்கிள்ள வேண்டியுள்ளது. இதற்கு எவ்வளவு சக்தி நிறைந்த உணவுவேண்டும்? அவர்களின் உடல்கள் எவ்வளவு பலமுள்ளதாக இருக்கவேண்டும்? உடல் பலமுள்ளதாக இருக்கத்தக்க சத்துள்ள உணவை நமது பெண் தொழிலாளர்கள், சாப்பிடுகிருர்களா என்பது கேள்விக்குறி.

சத்துள்ளஉணவு என்ருல் என்ன? அது எப்படி இருக்கும்? பால் கறக்கும் பசுவுக்கு புல்லேமட்டுமா போடுகிருேம்? பிண்ணுக்கும் நீரும் வைக்கின்ருேம், பிண்ணுக்கு இல்லாவிட்டால் நல்ல பால் கொடுக்காது. தவிடு போடுகிருேம், பருப்பு வகைகளை ஊரவைத்து அரைத்துக் கொடுக்கிருேம். இல்லாவிட்டால் பால் கிடைக்காது. வண்டி இழுக்கும் காளைக்கும் அப்படி உணவு தான் கொடுத்தாகவேண்டும்.

அதுபோல் தொழிலாளிக்கும் நியாயமான சத்துள்ள உணவு தேவை. அது எந்த அளவு தேவை எப்படிப் பெறுவது என்பதும் மிக முக்கியமானது. தொழிலாளர்களைப் பொருத்தவரை உழைப்பின் பயனுகக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டே உணவை நிர்ணயிக்கமுடியும், இன்றைய வருமானமே மாவு, கிழங்கு, போன்றவைகளையே வாங்கமுடியாத சம்பளம். தொழிலாளரின் சம்பளம் சாப்பிட, உடுத்த, குடும்பத்தை பாதுகாக்க, எவ்வளவு தேவையோ அதுவே சம்பளமாகும். சத்துள்ள உணவு நமக்கு வேண்டாமென்கிருேமா? அல்லது சக்தியற்றவர்களாக இருக்கவிருப்பமா? அல்லது சோம்பேறியாக சோம்பித்திறிவதில் நமக்கு ஆசையா? இல்லே,

தொழிலாளி என்பவன் பலசாலியாக இருக்கவேண்டும்.

இதை நாம் உணருமுன் நம்மிடம் நல்ல உழைப்பை எதிர்பார்க்கும் முதலாளியும், அரசாங்கமும் நாடும் உணரவேண்டும். பலமுள்ள தொழிலாளியிடந்தான் சிறந்த உழைப்பை எதிர்பார்க்கலாம். நல்ல உழைப்பால் தான் நாடும் நலம்பெறும், நல்ல லாபமும் கிடைக்கும். தகராறுகள் குறைந்து நல்லுறவும் சந்தோஷமும் நிலவும் அதைத்தான் ஒரு நாட்டின் அரசாங்கம் விரும்பவேண்டும்.

இன்று ஆட்சியாளர்கள் தோட்டத் தொழிலாளியின் உழைப்பை விரும்புகிருர்களா? அப்படியானல் ஏன் தோட்டத் தொழிலாளர்களை மாத்திரம் புறக்கணித்து வருகிருர்கள்; வேண்டுமென்று செய்கிருர்களா? ஒதுக்கவேண்டும் என்ற நோக்கத்தில செயல்படுகிருர்களா? என்பது இன்று கேள்விக்குறியாக அமைந்துள்ளது. எல்லோரின் சம்பளம் கேட்காமலே உயருவதும் இரவோடு இரவாக உயர்வதும், எதைக்காட்டுகிறது என்பதை, எடுத்துச்சொல்ல ஆட்சிமன்றத்தில் தக்கவோர் நாதியில்லை என்பதை தோட்டத் தொழிலாளர்கள் உணரவேண்டும் சம்பளம் கிடைக்கவேண்டும், அல்லது வாங்கவேண்டும். இது இன்று தொழிற்சங்கங்களின் ஒன்றுப்பட்ட சக்தியின் பின்னே தங்கியுள்ளது.

மாரி காலம் ஆரம்பித்துவிட்டது. மழையில் சாதாரணமாக வேலைச் செய்வது கிடையாது. விவசாயிகள் மழையில் நனைந்துகொண்டு வேலை செய்வதில்லை. துறைமுகத்தொழிலாளர்கள் மழையில் மூட்டை தூக்குவதில்லை மிருகங்களைகூட கட்டி இழுத்து வேலை வாங்கமாட்டார்கள். எல்லோருக்கும் மாருகத் தோட்டத் தொழிலாளிதான் மழையிலும் வேலை செய்கிருன், மழையில் நனையாமல் இருப்பதற்கு ஈரமாகாத உடைகள் வேண்டும். குளிரில் நடுங்காதிருக்க, கதகதப்பான ஆடைகள் வேண்டும். நாம் என்ன அணிகிருேம்? நாம் அணியும் ஆடை மழையில் தொப்பு தொப்பென்று நனைந்துவிடுகிறது. உடம்பு சில்லிட்டு நடுங்குகிறது. நாம்செய்த பாவம்தான் என்ன? மழைக்குப் பயந்து வீட்டிலிருந்துவிட்டால் என்ன நடக்கும்? ஒரு பக்கம் பட்டினிக்குப் பலியாவோம்; மறுபக்கம் தோட்ட நிர்வாகம் நோட்டீசைக் காட்டும். இதற்கு அஞ்சி வீட்டிலிருந்துவிட நினைக்காமல் வேலைக்கு ஓடுகிருேம். மழைக்கும் குளிருக்கும் நமக்கிருந்த ஒரே ஆடைதான் கம்பளி. கம்பளி நனைந்ததும் ஊறிப்போய் பாரம் கணமாகிறது. கூடையில் சுமக்கும் கொழுந்தும் ஈரத்தால் கணக்கிற கம்பளியும் இரண்டுவிதமான சுமையாக, போதாததற்கு நடுக்கிடும் குளிர். இந்த நிலையில் நாம் ஓயாது உழைக்கவேண்டிய வேதனையில் இருக்கிருேம்.

150, ஆண்டுகளுக்குமுன் கண்டுபிடித்த உடை இந்தக் கம்பளி. தேயிலைத் தோட்ட உற்பத்திக்கு முன் உற்பத்தியானது. அந்த கம்பளியும் இப்போது மறைந்துவிட்டது; அதற்குமாருக பொல்தீன் பேப்பரில் செய்யப்பட்ட சீட்டுகளைப் பாவிக்கின்றேம். அது மழையில் வேலைசெய்யும் தொழிலாளியின் பாதுகாப்பு உடையாக அமையவும் முடியாது. அதுவும் யாருக்கோ வேலைச்செய்ய நமது பணத்தைக்கொண்டு இவைகளைப் பெற வேண்டும். வேலைசெய்வதற்குத் தேவையான சாதனங்களை, உடைகளை தரவேண்டியது முதலாளி. ஆனல் நாம் மட்டும் நமது வேலை உடையை நமது பணத்தில் வாங்கவேண்டியது பெரும் அநியாயம் இந்த அநியாயத்தை எவரும் சிந்திப்பதில்லை. றப்பர் சீட்டையும், படங்கையும் நாம் கட்டிக்கொண்டு

திரியும் கேவலத்தை நாகரிக நாட்டிலே உள்ளவர்கள் கண்டால் நம்மைப் பார்த்துப் பழிப்பார்கள். இவைகளை மாற்றியமைப்பது யார் என்பதைச் சிந்திக்க தவறிவிடுரும்.

இந்த லட்சணத்தில் வேலைக்காட்டிலிருந்து வீட்டுக்குப் போகிரும், அங்கே ஈரப் பிடவைகளை காயவைத்துக் கொள்ள இடமில்லை. மழையும் காற்றும் வீட்டுக்குள்ளேயும், நம்மை விரட்டிக்கொண்டு வருகின்றன. மழையின் ராகதாளத்தை அங்கேயும் கேட்கின்ரும். செம்பையும், குண்டாவையும், தேடுகிரும். விறகு பச்சை; நெருப்புக்குப் பதிலாக நீலப் புகை கண்ணை அவிக்கும். தண்ணீர் கொண்டுவர குழாய்க்குப் போனுல் மழைக்கு அடைத்துக்கொள்ளும். வெய்யிலாயிருந்தால் சொட்டுச் சொட்டென்றுவரும். ஐந்தாறு பேர், ஏழெட்டுப்பேர், ஒரே லயக் காம்பராவில் குடியிருக்கவேண்டும். விறகு போடுவது எங்கே? சமயல் செய்வது எங்கே? உடையை உலர்த்துவது எங்கே? படுங்கை போடுவது எங்கே? தண்ணீர் வைப்பது எங்கே? குந்தியிருப்பது எங்கே? கோழி வளர்ப்பது எங்கே? குடும்பம் நடத்துவது எங்கே? உடம்பை நீட்டிப் படுப்பது எங்கே? இது மனித வாழ்க்கைக்கு ஏற்ற வாழ்க்கையா, ஏன் மாறவில்லை. நம்மால் மாற்ற முடியாதா? நாம் சிந்திக்கவில்லை மாற்று வழி காணவில்லை.

நியாயமான மாதச் சம்பளம் கிடைக்கவேண்டும், சம்பளம் நிச்சயிக்கப்பட்ட சம்பளமாக கிடைத்தால் சாப்பாட்டுப் பிரச்சினையும், உடைப் பிரச்சினையும் வீடு கிடைத்தால் 'காம்பராப் பிரச்சினையும் தீரும்.

இவைகளை நாம் பெற சக்தியுள்ள பலமுள்ள இயக்கமாக நமது சங்கத்தை மாற்றி அமைக்கத் தயாராகவேண்டும். அதற்காக பிரச்சினையை விட்டுவைக்கமுடியுமா? தொழிலாளர் தேசிய சங்கம் தொழிலாளர்களின் பலத்தால் இயங்குகிறது. தொழிலாளரின் சொத்தும் தொழிலாளர் தேசிய சங்கம் என்பதை தொழிலாளர்கள் உணர்ந்து ஒன்றிணைந்தால் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிதோன்றும். அதற்கு தயாராக வேண்டியவர்கள் நமது தொழிலாளர்கள் தான்.

---

— "சுயநலக்காரர்களையும், பெரும் பணக்காரர்களையும் பொதுமை இலட்சிய அடிப்படையில் நம்பாதே. அவர்கள் இறந்து போன சடலங்களுக்கு ஒப்பானவர்கள்." இது அநுபவம். எத்தனை உண்மை நட்புப் பாராட்டுகிறவர்களாயினும் சுயநலக்காரர்களும் பணக்காரர்களும் தங்கள் அந்தஸ்த்து மயக்கத்தில்தான் கலந்துரையாடுவார்கள். ஏதோ தப்பித் தவறி உதவிக்கு வந்துவிட்டாலும், அல்லது ஏதோ சிறு சிறு கடனுதவிகளைச் செய்து விட்டாலும் அதனை ஒவ்வொரு நாளும் பலர் முன் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படும் அவர்களின் சிறுமையுளத்தை என்னென்பது. இந்தச் சிறு கடனுதவிகளுக்காகக் கடன் பெற்றவரைத் தமது ஏவலராகவும் அவர்கள் பணிப்பதுண்டு. இந்த மனிதர்களிடமிருந்து பணமும் பவிசும் போனபின் அவர்களின் அகந்தையே அவர்களைப் பழிவாங்கும். எனவே எத்தனை கோடி பணம் இருந்தாலும், பவிசிருந்தாலும் மனிதத் தகையுடன் நடந்து கொள்வதே பண்பு இந்தப் பண்புக்குக் குந்தகம் விளைந்திடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். பணத்தை அடிப்படையாக வைத்து குணத்தை அளவெடுப்போர் தம்மையும் நம்புவதில்லை பிறரையும் நம்புவதில்லை."

= சக்தி

# தொழிலாளியின் காவலன் தொழிற்சங்கமே

— எஸ். செல்லையா —

மாத மும்மாரி பொழிந்து பூமியில் வேளாண்மை பெருகி காணுமிட மெல்லாம் பச்சைபசேறென கண்ணுக்குக் காட்சியளிக்கினும் நாட்டின் பொருளாதாரம் பெருகியிருப்பினும், நல்லரசு ஓங்கி நாட்டுக்குரிய அரசியல் கொள்கைகள் சிறந்திருப்பினும், மக்கள் வாழ்விலே மகிழ்ச்சி பொங்கி வடிந்திடினும், மனிதர்கள் எங்கெல்லாம் சம்பளத்தை எதிர் பார்த்துத் தொழில் செய்கின்றார்களோ அங்கெல்லாம் தொழிற்சங்கங்கள் அமைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மனிதன் பிறந்தது முதல் தன்னுடைய தேவைகளுக்காக மற்றவர்களுடைய உதவியை நாடி நிற்கின்றான். குழந்தை, பாலுக்கு தாயின் உதவியை நாடுகின்றது. வீட்டிலே ஏற்படும் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்ய அண்டை வீட்டினிலே உதவியைத் தேடுகிறோம். கிராமத்திலே, தொழில் நிலையத்திலே, தோட்டங்களிலே, காரியாலயங்களிலே ஏற்படுகின்ற தேவையைப் பூர்த்தி செய்யவும், தோன்றும் பிரச்சினைகளுக்கு முடிவுகாணவும் அங்குள்ள சகாக்களின் உதவியை நாடுகிறோம். உதாரணமாக ஒருவீட்டிலே நடைபெறும் வைபவத்திற்கு அந்த எல்லையிலே வாழுகின்ற மக்களின் உதவியை நாடி நிற்கின்றோம். மனிதன் தன் வாழ்க்கை எனும் ஓடத்தை இந்த வையமெனும் சாகரத்தினில் ஓட்டி கரை சேர்த்திட அனுதினமும் அயலாரின் உதவியையும் ஒத்துழைப்பையும், ஆசியையும் நாடி நிற்பதுடன், நாமும் அவர்களுடன் ஒன்றோடு ஒன்றாக இணைந்து வாழ்கிறோம்.

உண்ண உணவு வேண்டுமெனின், உடுத்த உடை வேண்டுமெனின், குடியிருக்க வீடு வேண்டுமெனின், பிணியைப் போக்க மருந்து வேண்டுமெனின், வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய ஒவ்வொரு பொருட்களுக்கும் மற்றவர்களின் உழைப்பை நம்பியே வாழ்கின்றோம். நம்முடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் மற்றவர்களுடன் இணைந்து ஒன்றோடு ஒன்றாக பிணைக்கப்பட்டுள்ளதால் ஒரு சமுகமாக வாழ்கிறோம். பொருளாதார அடிப்படையில் தனி மனிதனாக சமுதாயத்தில் இருந்து தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டு ஒருவன் உலகத்தில் வாழமுடியாது.

இயற்கையின் படைப்பிலே தோன்றியுள்ள நிலவளத்தில் மூலதனமிட்டுள்ள தனிப்பட்ட முதலாளியிடமோ, அல்லது பல முதலாளிகள் ஒன்றாகக் கூடி உருவாக்கியுள்ள நிறுவனங்களிலோ அல்லது கூட்டுத்தாபனங்களிலோ அன்றி அரசியல் நிறுவனங்களிலோ சமபளத்திற்காக உழைக்கின்ற பாட்டாளிகள் தனித்தனியாக வாழமுடியாது. ஒவ்வொரு தொழிலாளியும் தான் செய்யும் தொழிலின் அடிப்படையிலும் அல்லது தான் செய்யும் வேலையின் அடிப்படையிலும் தொழிலாளர்களின் ஒருமைப்பாடு அமைந்திருப்பதாலும் தொழில்கள் ஒன்றோடு ஒன்றாக இணைந்திருப்பதாலும் கூடி வாழவேண்டுமென்ற நியதி இயற்கையானது என்பது தெளிவாகின்றது.

தொழிலாளி ஒவ்வொரு நாளும் செய்யும் தொழிலுக்காக வழங்கப்

படும் சம்பளத்தையே நம்பி வாழ்கிறன். தான் செய்யும் தொழிலே இழந்து விட்டால் அவனது வாழ்க்கை இருண்டு விடுகிறது அவனது வாழ்வு தொழிலுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

அவனது தொழில் பாதுகாக்கப்பட்டால்தான் வாழ்க்கை மலரும். தொழிலேப் பாதுகாத்திட தொழில் சங்கம் என்ற கவசம் அத்தியாவசியமாகின்றது. தொழில் சங்கம் என்ற கவசத்தைத் தொழிலாளர்களே உண்டாக்குவதால், அதன் மீது பற்று கொள்கிறர்கள்.

தனிப்பட்ட ஒரு தொழிலாளி தொழில் நிர்வாகிகளிடத்தில் தனக்கு அளிக்கப்படும் சம்பளம் போதாது, வீடு காணுது, வைத்திய வசதி போதியதாக அமையவில்லே, வழங்கப்படும் உணவு தரமாக இருக்கவில்லே, விபத்துக்களிலிருந்து பாதுகாக்கப் போதிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லே, முழுமனதுடன் வேலே செய்யத் தகுதியான சூழ்நிலே உருவாக்கப்படவில்லே என்பதை எடுத்துக்கூறி நிவாரணம் கேட்டால், நிவாரணம் கிடைக்காது. அதற்குப் பதிலாக வேலேயை விட்டு வெளியேற்றப்பட்டு விடுவார்கள்.

பொருளே முதலீடு செய்கின்ற முதலாளிகள் கூடுதலான ஆதாயத்தைச் சம்பாதிப்பதே தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறர்கள். தொழிலாளர்களே கண்ணியமாக நடத்துவதாகவும், அவர்களுடன் தோழமை கொண்டுள்ளதாகவும் பிரசாரத்துக்காகக் கூறப்படுகிறதே யொழிய நடைமுறையில் அவர்களின் குறிக்கோளே அடையும் பொருட்டு தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறர்கள். அவர்கள் துன்பத்தை அனுபவிக்கும் சூழ்நிலேயையே உண்டாக்குகிறர்கள் என்பதே உண்மையாகும்.

எந்தத் தொழிலிலே வேலேசெய்கின்றவர்களாயிருந்தாலும் அங்கே தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் அத்தனே பேரும் ஒன்றுகூடி தங்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளே முன்னேற்றமுடையதாக்கவும், தொழில் வசதிகளே அதிகரிக்கச் செய்யவும், அந்திய காலத்திலே தொழில்புரிய முடியாமல் உருக்குலேந்து இருக்கின்ற பொழுது வாழ்க்கை நடத்த வயோதிகப் பணம் பெறவும், காப்புறுதிப் பணம் மூலம் பயன் பெறவும், தொழிற்சங்க மூலம் கோரிக்கை விடும்போது பயிற்றப்பட்ட தொழிலாளர்களே இழந்து புதிதாகத் தொழிலேத் துவங்கும் நிலேக்கு முதலாளிகள் தள்ளப்படுவதற்கு தயாராக இருப்பதில்லே. தொழிலாளர்களின் கோரிக்கைகளே ஆராய்ந்து சிலவற்றைப் பூர்த்திசெய்து தொழிலின் அமைதிக்கு ஒழுங்குகளேச் செய்து தொழிலே நடத்துவதே முதலாளிகளின் அபிலாசைகளாகும்.

தொழிற்சங்கம் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளிலே தொழிலில் எவ்வாறு முதலாளிகள் முதலீடு செய்கிறர்களோ அவ்வாறே தொழிலாளர்களும் தங்களின் உழைப்பை தொழிலின் முன்னேற்றத்திற்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளார்கள் என்பதை முதலாளிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். தொழில் வளம்பெற முதலாளி தொழிலாளி ஆகிய இருவரும் பங்குதாரர்களாகும் என்ற நிலே உருவாக்கப்பட்டுள்ளன.

தொழிலிலே பழிவாங்கப்படுவதைத் தடுப்பதற்கும், தொழில் முன்னேற்றத்திலே தொழிலாளியின் அபிப்பிராயங்களே எடுத்துக்கூறி நிர்வாகத்திலே பங்குபெறவும் சாதி, மத, நிறம், அந்தஸ்து என்ற அடிப்படையில் காட்டப்

படையில் காட்டப்படும் வேறு பாடுகளை அகற்றவும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நிரந்தர அரணாக தொழில் சங்கங்கள் அமைந்துள்ளன.

தொழிற்சங்கத்தின் மூலம் ஒன்று சேர்ந்த தொழிலாளர்கள் தங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் பொழுதும், அல்லது கோரிக்கைகளைப் பெற மேல் நடவடிக்கைகள் எடுக்கும் பொழுதும், தொழிலில் ஈடுபட்டுள்ள அத்தனை தொழிலாளர்களையும் வேலையைவிட்டு வெளியேற்றிவிட முடியாதவாறு சமரசத்திற்கு சாதகமான சூழ்நிலை உண்டாக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் தங்களின் குடும்பவாழ்வு சிறப்பாக அமைய, தொழிலாளர் சமுதாய வாழ்க்கை முன்னேற, நாட்டின் பொருளாதார நிலை செழிப்புப்பெற, நோய் நொடியற்ற வாழ்க்கை நடத்திட, தன்மானம் காத்திட தொழிற்சங்கத்திலே அங்கம் வகிக்கின்றனர். தொழிற்சங்கம் தொழிலாளர் வாழ்வை வளமாக்கி பாதுகாக்கும் காவலனாகத் திகழ்கின்றது.

---

## கம்போஸிட்டர் செய்த கவிதை

உரிமை இல்லாமல்—உறைவிடம்
இல்லாமல், எமக்கென இலங்கையில்
ஒருபிடி மண் கூட சொந்தமில்லாமல்
தேயிலைத் தோட்டங்களிலும், றப்பர்,

கொக்கோ தோட்டங்களிலும் மாடாய்
உழைத்து மணலாய்த் தேய்ந்து
இதுவரையில் எந்த ஒரு மகிழ்வும்
அடையாத ஏழைத் தோட்டத்

தொழிலாளர்களாகிய எங்களால்தானே
இலங்கை நாடு செழித்து நிலவுகிறது.
இந்த நாட்டுச் சிங்கள
அரசு எங்களது மனிதாபிமானத்தை

மதியாமல், மனிதாபிமானம் விட்டு
எம்மை நாடு கடத்த துணிந்து
விட்டதே இந்த அரசின்
கெடுபிடியாலன்றோ;

இன்று தேசத்திலுள்ள வரெல்லாம்
துன்பக்கண்ணீர் வடிக்க நேரிட்டுவிட்டது.
ஏழையழுத கண்ணீர் கூரிய
வாளொக்கும் என்பதன் கருத்துப்

பலித்து வருகிறதாக நான் கருதுகிறேன்
இயற்கைக்குப் பொருந்தாத
கெடுபிடிகளால்
பலியாகாதவர் யாரே.

பி. இராமச்சந்திரன்
நாலப்பிட்டி.

புதுக் கவிதைகள் என்று தற்காலத்தில் எப்படி எல்லாமோ எழுதி கவிதை வடிவத்தில் வரிகளைப் பிரித்துப் போடுவதே வசனகவிதை என ஒரு சில விமரிசகர்கள் இலங்கையிலே கூறி வருவது எங்களைப் போன்ற கம்போஸிட்டர்களின் கருணையால் தான். புதுக்கவிதை விமரிசகர்களுக்கு என்னைப் போன்ற கவிவாணர்களைப் பிடிக்கும். ஏனென்றால் அவர்கள் எதை எழுதினாலும் பக்கத்திலிருக்கும் கம்போஸிட்டர் செய்த கவிதையைப் போல் பிரமாதமாக வரிகளை அடிப்போம். பிரித்தும் போடுவோம். கம்போஸிட்டர்களை நம்புங்கள் கவிஞர்களாகி விடலாம். இப்படியான கவிதைகளைத்தான் இன்று சிலர் கவிதையெனவும் நம்புகிறார்கள். உண்மையான கவிதை உள்ளத்தில் உதயமாக வேண்டாமா!

## செய்திக் கடிதம்

### உணவுத் தட்டுப்பாட்டுக்குப் பரிகாரம்

அன்புள்ள தொழிலாள நன்பர்களே,

அக்டோபர் மாதம் 1ம் திகதிக்குப் பின் நாட்டு மக்களின் வராந்தர ரேசன் குறைக்கப்பட்டு வாரத்தில் அரை கொத்தரிசி இனு மாகவும், ஒரு இருத்தல் மா-/70 சதத்திற்கும் வழங்கப்பட்டு வருகின் றது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கை தேசிய ரீதியில் அமைந்திருப்பி னும் இதில் தோட்டத் தொழிலாளர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளார்கள்.

ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுதது போல மலைநாட்டில் உள்ள ஒரு சில வியாபாரிகள் தொழிலாளர்களுக்காக பரிந்து இரக் கம் காட்டுவது போல பாசாங்கு செய்துகொண்டே அரிசி, மா, கேள் வரகு, ஆட்டாமா முதலிய உணவுப் பொருட்களைப் பதுக்கிவைத்துக் கொள்ளை இலாபம் அடைந்து வருவது இன்று மலைநாட்டில் நடை பெறும் அன்றாட சம்பவமாகும்.

பான் ரொட்டி நாட்டு மக்களுக்கு இருத்தல் (14 அவுன்சில் தயாரிக்கப்பட்டது) -/76 சதமாக, கஷ்டமின்றி கிடைக்கத் தக்கதாக அரசு பேக்கரிகளுக்கு நியாயமான மாவு வழங்கினாலும், தோட்டத் தொழிலாளர்கள் வேலையின்றி, நாள் முழுவதும், கியூவரிசையில் நின்று பான் கிடைக்காது அவதிப்படுவதை நாம் தினந்தோறும் மலை நாட்டின் நகர்களிலே காணக்கூடியதாகவிருக்கின்றது.

உணவு பற்றுக்குறை சம்பந்தமாக மக்கள் பேசாத இடமில்லை. பஸ், புகையிரத பிரயாணங்களிலும். பஸ், புகையிரத நிலையங்களி லும், நடைபாதைகளிலும், நகர்ப்புறங்களிலும் இதே பேச்சுத்தான். ஆகவே தூங்கும் போது தவிர்ந்த மற்ற எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், விவாதிக்கப்படுவதுமான முக்கியப் பிரச்சினையாக உணவு தட்டுப்பாடு இன்று அமைந்துள்ளது.

இந்நிலையில் உணவு பங்கீட்டை அரசாங்கம் குறைப்பதற்கான காரணமென்ன? அதைச் சீர்படுத்த வழிவகைகள் என்ன? குறைந்தளவு உணவுப் பொருட்கள் கிடைக்கும் போது குறைவான அளவு உண வுப் பொருட்களை எப்படி நிறைப்படுத்துவது என்பனபற்றி முடிவு காணத் தவறி மலையகத் தொழிற்சங்கங்கள் மீது பழிகளை சுமத்தி தங்களது ஆத்திரத்தையும் கோபத்தையும் தீர்த்துக் கொள்ள முயலு கின்றனர். மலையக மக்கள் எச்சந்தர்ப்பத்திலும் எந்த அரசாங்கத்தை யும் நம்பியிருந்ததில்லை. அவர்கள் தங்கள் கஷ்ட, நஷ்டங்களை தீர்த் துக் கொள்ளவும், உரிமைகளை நிலைநாட்டவும் தொழிற்சங்கங்களையே நம்பியிருக்கின்றார்கள். இந்நிலையில் அவர்களுக்கு உணவு பங்கீட்டில் குறைவு ஏற்பட்டவுடன் தாங்கள் அங்கம் வகிக்கும் சங்கங்கள் தங் களின் உணவு விடயமாக கவனம் செலுத்த வில்லையென்று நினைக் கின்றார்கள்.

மலையகத் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய உணவு வகை களைத் தோட்ட நிர்வாகம் மூலமும், நகரப்புற கடைகளிலும் பெற்று வந்தார்கள். மலையக நகர்ப் புறங்களில் அமைந்துள்ள கூட்டுறவு கடை கள் தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான முறையில் உணவுப் பொருட்களை வழங்குவதில்லை. இதன் காரணமாக முன்பு அரைப்பட்

டினியோடு வாழ்ந்துவந்த தோட்டத் தொழிலாளர்கள் இன்று முழுப் பட்டினியாக வாழ்கின்ருர்கள்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிற்பி அமரர் வி. கே வெள்ளையன் காலமாவதற்கு முன் ஒரு வருட காலமாக நடத்துவந்த நிர்வாக சபைக் கூட்டங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் இந்நாட்டில் உணவுற்பத்தியில் ஏற்படக்கூடிய சிரமங்களை விளக்கி அதிலிருந்து தொழிலாளர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள காய்கறி, கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டுமென கேட்டுக் கொண்டார் அவர் தீர்க்கதரிசனமாக கூறியதை நாம் ஏற்று அவர் வழியில் பின்பற்றத் தவறி விட்டோம்.

கடந்த ஒருவருட காலமாக தொ. தே. சங்க சாணக்கியர் திரு ஸி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் நம் மக்கள் உணவுற்பத்தியில் ஈடுபட அரசாங்கத் தோடும், தோட்டமுதலாளிமார் சம்மேளனத்தோடும் பேச்சுவார்த்தை நடத்தி ஆக்கபூர்வமான வழிவகைகளை செய்துள்ளார். அத்தோடு தொழிலாளர்கள் உணவுற்பத்தியில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி வந்துள்ளார். எனினும் நம்மவர்கள் போதியளவு சிரத்தை காட்டவில்லை என்பதைக்காண வருந்துகின்ருேம்.

உணவு விநியோகக் குறைப்பால் தோட்டத்தொழிலாளர்கள் படும் அவதியை உணர்ந்த நமது தொ. தே. சங்கம் பரிகாரம் காண வழிவகைகளை ஆராய்ந்து வந்த வேளையிலே தோட்டத் தொழில் துறை அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களும் தொழில் அமைச்சர் மைக்கல் சிறிவர்தன அவர்களும் உணவுற்பத்தி சம்பந்தமான பேச்சுவார்த்தை யொன்றினை தோட்டத் தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்து நடத்தினர்கள். இதில் நமது சங்கத்தின் சார்பாக திருவாளர்கள். ஸி. வி. வேலுப்பிள்ளை, பி. பெருமாள், பி. வி. கந்தையா, ஜீ. இராஜகோபால் ஆகியோர் கலந்துக் கொண்டார்கள். இப் பேச்சுவார்த்தையில் மலையக மக்களின் பிரதிநிதியாகவுள்ள முன்னைய பாராளு மன்ற நியமன உறுப்பினரும், இன்றைய பாராளுமன்ற நியமன உறுப்பினரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேச்சு வார்த்தையில் தோட்டத்தொழிலாளர்கள் சம்பந்தப் பட்டவரை உணவு பற்ருக்குறையைப் பூர்த்தி செய்ய கீழ்கண்ட வழி வகைகளை செய்ய அமைச்சர்கள் முன்வந்துள்ளார்கள்.

(1) கூட்டுறவு கடைகள் மூலம் பேக்கரிகளுக்கு மாவு தோட்டத்தொழிலாளர்களுக்கு போய்ச்சேருவதில்லை. தோட்டத் தொழிலாளர்கள் கிராமத்துக்கோ அல்லது நகரத்துக்கோ போய்ப் பான் வாங்க வசதியுடையவர்களாய் இல்லை. பேக்கரிகளில் தயாரிக்கப்படும் பான் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதியதாகவும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு ரேசன் வழங்கப்படாததால் கூட்டுறவுக் கடைகளிலும் இவர்கள்' மாவு வாங்கமுடியாது. இவற்றை காரணமாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மா தோட்டத் துரைமார் மூலம் வழங்கப்படும்.

(2) அரசாங்க மாவு அரைக்கும் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்கும் ஆட்டா மாவு, ரவை போன்ற உப உணவுப் பொருட்களை தோட்டத் தொழிலாளர்களுக்கு நேரடியாக வழங்கமுடியுமாவென தோட்டத் தொழில்துறை அமைச்சு விசாரணை நடத்தி அதற்கான ஏற்படுகள் செய்வது.

(3) நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்தால் குறைந்த விலைக்கு தற்போது அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இத்திணைக்களத் தில்விற்பனைக்குப்பின் மிகுதிப்படும் அரிசியை சேர்த்து அரைக் கொத் தரிசி, கால் கொத்தரிசி என்ற விகிதத்தில் விநியோகிக்கக்கூடியளவு அரிசி சேர்ந்ததும் அதனை தோட்டத் தொழிலாளர்க்கு வழங்குவது.

(4) தோட்டங்களில் பயிரிடாத நிலங்களில் பயிர் செய்ய தோட்ட நிர்வாகமே முன்னின்று, அதில் வேலை செய்பவர்களுக்கு செக்ரோல் மூலம் சம்பளம் வழங்குவது.

(5) உபவுணவுப் பொருட்களை தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு தோட்ட நிர்வாகத்திடம் பணமில்லை என்று தோட்டத் துரைமார் சொல்லுவார்கள். இதனை தவிர்ப்பதற்காக தொழிலாளர்க ளுக்கு மாதத்தில் 26 நாட்கள் வேலை கொடுத்து அவர்களுக்கு சேர வேண்டிய சம்பளத்தில் உப உணவு பொருட்களை வாங்கி தொழிலா ளர்களுக்கு வழங்கவேண்டும்.

மேற்போந்த பயன்தரக்கூடிய கருத்துக்களை நமது சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட பிரமுகர்கள் அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்புள்ள பெ. பெருமாள்.
(அரசியல் பொருளாதாரச் செயலாளர்.)

---

— உனது முன்னோர் எல்லோருமே ஏமாற்றப்பட்டும், வஞ்சிக் கப்பட்டும், கொத்தடிமைக் கூலிகளாய் நசுக்கப்பட்டும், மாண்டு மறைந்து போயினர். அவர்களின் பின் சந்ததியான நீயும் அதே நிலையில் ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு நசுக்கப்பட்டு வருகிறாய். வாலிபனே! வாழ்வது சிறிது காலமே... இக்காலத்துள் உனது பெயர் புகழுடன் விளங்கிட ஏதாவது அரிய செயலைச் செய். முக்கியமாக உனது வருங்காலச் சந்ததியினர் இந்த நாட்டிலே சுதந்திரமாக, சமத் துவ உரிமையுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்திட உன் ஆற்றலைப் பயன் படுத்திடுவாயாக. துணிவுடன் இன்றே அந்தப் பணியைத் தொடங்கு.

— பணத்திற்காகவே உலகத்தில் உறவு போலியாக்கப் படுகி றது. இந்த உறவு பணத்தையும் அந்தஸ்தையும் அடிப்படையில் வைத் துக் கனம்பண்ணப்படுகிறது. பணமும், அந்தஸ்தும் குறையும் போது இந்த உறவும் குறைந்து விடுகிறது. பாசத்தில் விளையும் உறவுதான் இயல்பான உறவு. இந்த உறவுக்கு உயர்வு, தாழ்வு என்ற அந்தஸ்து கிடையாது. கருணையும் கனிவும் இந்த உறவினால் பெறப்படுகிறது. இந்த இயல்பான உறவையும் அகந்தை காரணமாகப் பலர் இழந்து துன்புறுகிறார்கள்.

— அன்புக்காகத் தலைவணங்கலாம். ஆனால் அகந்தையுடைய வர் முன் தலைவணங்காதே.

— துரோகிகளாக மாறும் நண்பர்கள் மலிந்துவிட்டால் ஒருவனது சுதந்திர வாழ்வும் பாதிக்கப்படலாம். இந்த நிலையில் நேர்மையே பிர தானமாகக் கொண்டு அந்தத் தனிமனித சுதந்திரத்தைக் காப்பதே உண்மையான சுதந்திரவாதிகளின் பண்பாக இருந்திடவேண்டும். தன் கண்முன்னே ஒரு தனிமனிதன் நசுக்கப்படுவதைக் காணாதது போல நடப்பவன் சுதந்திர மனிதனாக விளங்கிட முடியாது. —சக்தி

# ஆரம்பகாலச் சர்வதேசத் தொழிற் சங்கங்களும் சம்மேளனங்களும்

— சித்தர் —

தொழிற்சங்கங்கள் எந்த நாட்டில் முதலாவதாக அமைக்கப்பட்டன என்றும், யாரால் அமைக்கப்பட்டதெனவும் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாதாயினும் பல நாடுகளில் பல சமயங்களில் தொழிலாளர்களின் குமுறல்களால் தொழிற்சட்டங்களும், ஒரு சில சலுகைகளும் கிடைத்து வந்தன. இவைகளைப் பெறவும் தொழிலாளர்கள் மிகவும் சோதனைகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. ஜெனிவாவிலுள்ள சர்வதேசத் தொழிலாளர் அலுவலகப் பிரசுரமான ஐ. எல். ஓ பிரதியிலிருந்து தொகுத்தளிக்கிறார் சித்தர். —ஆ-ர்

தொழிலாளர்களுக்கு எவ்விதமான பாதுகாப்பும், நீதிமுறைகளும் இல்லாத வகையில் அடிமைகளைப் போல இரவு பகல் என்று பாராது நிலப்பிரபுக்களும் முதலாளித்துவச் செல்வந்தர்களும் கொடுமைப்படுத்திவந்தனர். பால்மணம் மாறாத சிறுவர் சிறுமியர், பெண்கள் முதலானோர் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை வாங்கப்பட்டனர். உழைப்புக்கேற்ற ஊதியமில்லாமலிருந்தது. தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருக்கவேண்டுமென்பதே அடிப்படை நோக்கமாக நிலவியது.

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யமுடியாதிருந்த நிலை. வாய்திறந்து நீதிகேட்க முடியாத பயங்கரச் சூழல். இம் என்றால் சிறைவாசம் அல்லது பகிரங்கத் தண்டனை..

இப்படியே தொழிலாளரை அடக்கியாண்டு வந்த காரணத்தால் காலவேகத்தில் தொழிலாளருக்குள்ளே குமுறல்கள் கொந்தளித்தன. நாட்டுக்கு நாடு தொழிலாளர்களின் குமுறல்கள் தொனித்தன. பல்லாயிரக்கணக்கானோர் சிறைவாசம் ஏற்றனர். பல நூறு மக்கள் உயிரிழந்தனர்.. இப்படியே போராட்டங்களும் வேலைநிறுத்தங்களும் வளர்ந்தன. பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.

இங்கிலாந்தில் 1802ம் ஆண்டில் தான் தொழிற்சாலைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தச்சட்டங்கள் 31 ஆண்டுகளாகத் தொடர்ந்த பலத்த எதிர்ப்புக்களுக்குப் பின் 1833ல்தான் சட்டமாகியது. 1840க்குப் பிறகு லங்கா ஷயர் பஞ்சாலைத் தொழிலாளர் பத்து மணி நேரமாக வேலைநேரத்தைக்குறைத்திடும் கமிட்டிகளை நிறுவினர். 1842ல் பெண்களும், சிறுவர்களும் சுரங்கங்களில் இறங்கி வேலைசெய்யக்கூடாதென்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர்கள் எவ்விதச் சங்கமும் அமைக்கக்கூடாது. அப்படி அமைப்பது குற்றம் என்று நெடுங்காலமாகக் கருதப்பட்டதால் முதன்முதல் இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் பெருந்தொல்லைகளுக்கு உள்ளாயினர்.

19ம் நூற்ருண்டின் நடுவிலிருந்து தான் இன்றுள்ள முறையில் தொழிலாளர் சங்கங்கள் உருவாயின. 1871, 1875ம் ஆண்டுகளில் நிறைவேறிய சட்டங்களின் மூலமாகவே தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட்டன. 1868ல் தொழிற்சங்கக் காங்கிரஸ் துவங்கப்பட்டது.

பிரான்சில் 1864ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் தொழிலாளர் வேலை செய்திட மறுப்பது விரோதமானதல்ல என்று கூறியதன் விளைவாகவே 1884ல் தொழிற்சங்கங்கள் நிறுவன அமைப்புச் சுதந்திரம் பெற்றன. 1895ல் பல தொழிற்சங்கங்கள் இணைந்தன. 1895ல் ஒரு பொது சம்மேளனமும் உருவாகியது.

1898, 1899ம் ஆண்டுகளில், சுவீடன், நோர்வே, டென்மார்க் நாடுகளில் தொழிற்சங்க அலுவலகங் ஏற்படுத்தப்பட்டன. இத்தாலியில் 1906ல் தொழிற்சங்க மகா சம்மேளனம் நிறுவப்பட்டது. 19ம் நூற்ருண்டின் இறுதியில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் இச்சூழ்நிலை ஏற்பட்டது.

அமெரிக்காவில் தொழிலாளர் குமுறல் 1869—1870ம் ஆண்டுகள் தொடக்கம் பரவலாக நீடித்தது. 1878க்குப்பின் இயக்கமாக வளரத் தொடங்கியது- 1886ல் சாமுவேல் காம்பர்ஸ் என்ற சுருட்டுத் தயாரிப்பாளரால் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் உருவாகியது. இவர் இலண்டன் வாசி. அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்தார்.

ரஷ்யாவில் 16வது நூற்ருண்டின் கடைசியிலிருந்தே தொழிலாளரின் கிளர்ச்சி தொடங்கலாயிற்று. 1861ல் அவர்களின் அடிமை நிலை மாறியது. ஆயினும் திருப்தி ஏற்படவில்லை. 1905ம் ஆண்டில் ரஷ்ய விவசாயத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டதாயினும், நிலப்பிரபுக்களுக்கும், குடியானவர்களுக்கும் தொடர்ச்சியாகத் தீராத பிரச்சினைகள் உண்டாயின. கலகங்களும் கலவரங்களும், பரவலாக ரஷ்ய நாட்டில் நிகழ்ந்தன. 1809தொடக்கம் 1880க்குள் பற்பல வேலைநிறுத்தங்கள் நடந்தன. 1904ல் பொது வேலைநிறுத்தம் நடந்தது. அதனால் 9 மணி நேர வேலைச்சட்டம் அமுலாக்கப்பட்டது. 1905ல் ரஷ்யாவில் சுமார் 13 ஆயிரம் வேலைநிறுத்தங்கள் நடந்தன. 1906ல் சட்டபூர்வமாகத் தொழிற்சங்கங்களை ரஷ்ய அரசு அங்கீகரித்தது.

அமெரிக்காவிலுள்ள கியூபாவில் 1868ல் புகையிலைத் தொழிலாளர் ஒரு சங்கம் அமைத்துக்கொண்ட போதிலும் 1878ல் பியூனிஸ் அயர்ஸ் நாட்டில்தான் உண்மையான தொழிற்சங்கம் முதன்முதலாகத் தோன்றியது. அது ஒரு அச்சுத் தொழிலாளர் சங்கம்.

சிலி நாட்டில் 1890ல் தொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தத்தினல் தொழிற்சங்க இயக்கம் வளர்ந்தது. 1909ல் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் நிறுவப்பட்டது.

பிரசீலில் 1093ல் ரயில்வேத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது.

பெரு என்ற நாட்டில் 1884ல் பொதுத் தொழிலாளர் சங்கம் துவக்கப்பட்டது.

19ம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே சர்வதேசிய அடிப்படையில் தொழிலாளர் நிலையைச் சீரமைப்புச் செய்ய முதன்முதலில் கருத்துத் தெரிவித்தவர், இராபர்ட் ஓவன் என்பவராவார். அவர் ஸ்கொட்லாந்து நாட்டு ஆலை முதலாளி. 1818ல் அவர் ஐந்து வல்லரசு மாநாடொன்று ''எய்லா ஷா பெல்'' என்ற இடத்தில் நடைபெற்றபோது தொழிலாளர் கமிட்டி ஒன்றை அமைக்கும்படி எழுதினர். அது ஆலோசனைக்கு எடுபடவில்லை. 20 ஆண்டுகளுக்குப்

பின் பிரஞ்சு சமுதாய இயல் அறிஞர் ஜொரோம் அடால்ஃப் பிளாங்கி என்பவர் அதே கருத்தை வெளியிட்டார். அதுவும் பலன் பெற்றுத் தரவில்லை.

1847ல் தொழிலாளர் நலச்சட்டத்தைப் பிரகடனம் செய்யுமாறு ஆல்ஸேஸைச் சேர்ந்த டேனியல் லகிராண்டு என்ற பிரஞ்சு முதலாளி பிரஞ்சு அரசுக்கு எழுதினர் அரசோ செவிசாய்க்கவில்லை. அவரோ பிரான்ஸ், ஜெர்மனி, சுவீட்சர் லாந்து, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார். பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையும் கவனிக்கப்படாமலிருந்தது. ஆனல் பிரான்ஸ் இத்தாலி நாடுகளுக்கிடையிலும், இத்தாலி-சுவீட்சர்லாந்து நாடுகளுக்கிடையிலும் இரு தரப்பு தொழில் உடன்படிக்கை அமுலுக்குவந்தது. அதன்பின்னரே சர்வதேச அடிப்படையில் நடவடிக்கை தேவை என்பதை உணரலாயினர் 1847ல் கார்ல் மார்க்சும், பிரடரிக் ஏங்கல்சும் உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள் என்ற கோஷத்தை உருவாக்கினர். 1866ல் நடந்த உலகத் தொழிலாளர் காங்கிரஸ் சர்வதேச அடிப்படையில் தொழிலாளர் சட்டங்களை உருவாக்கிட வற்புறுத்தியது. 14 ஆண்டுகளின்பின் சுவிட்சர்லாந்து நாடாளுமன்ற உருப்பினரான பிரேயின் முயற்சியில் 1880ல் ஒரு மாநாடு கூட்டும் திட்டம் நிறைவேறியது. 1890ல் பெர்லினில் 12 ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்தனர். அதன்பின்னர் பிரஸ்ஸல்சில் 1897ல் அதிகாரபூர்வமற்ற கூட்டம் நடந்து ஆலோசித்ததன் பயனுக 1900ல் சர்வதேசக் குழு ஒன்று அமையலாயிற்று. அதுவே சர்வதேசத் தொழிலாளர் நல உரிமைப் பாதுகாப்புச் சட்ட அமைப்பை உருவாக்கியது. பிரான்சைச் சேர்ந்த லியோன் பூர்ஷ்வா, பெல்ஜியத்தைச் சேர்ந்த எர்னஸ்ட் மகைம் போன்ருேர் அதில் முக்கிய பங்குபற்றினர்.

---

— நண்பனே! சுயநலக்காரர்களால் நீ எவ்வளவு எளிதாக ஆசை காட்டப்பட்டு ஏமாற்றப்பட்டிருக்கிருய் என்பதைத் தெரிந்துகொள். உன்னைக் கைப்பாவையாக ஆக்கிக் கொண்டவர்கள் தங்கள் நிலையை உயர்த்திப் பதவி உச்சத்தை எட்டிப் போய்விட்டதை எண்ணிப்பார். இங்கே நீ செய்வதென்ன? உன் இனத்தையே அழிப்பதற்கு முன்னேட்டமாகப் போதிக்கப்படும் வர்க்கப் புரட்சியில் மயங்கி நிற்கிருய். உன்னையே நீ அழித்துக்கொள்ளக் காட்டித்தரப்படும் பெரியதோர் சதியாட்டம் இது. ஆகவே விடுதலைக் குமுறலுடன் இந்தக் கொடுமைகளிலிருந்து விடுவித்துக் கொள்.

— உனது இனத்தைப் பழித்து உன்னையும் தாழ்த்தி, உன் சொந்த அறிவை மூடி மறைத்திட வர்க்க பேதங்களைப் போதித்து உன்னையே அடிமையாகவும், கருவியாகவும் ஆக்கிக் கொண்டிருக்கும் மனிதர்களிடமிருந்து தப்பித்துக் கொள். உன் சுதந்திர வழியின் சிற்பி நீதான். உன் வழியை இன்றே உருவாக்கிடு.

— மதுவின் வசப்பட்டவன், குடும்பத்தின் நலன்களில் அக்கறை காட்ட முடியாதவனுகி விடுகிருன். மது, மனிதனின் இயற்கையான சுபாவத்தைப் பாதிக்கிறது. மதுவின் வேகம் திடீர் திடீர் எனத் தாக்கி மூளையைச் சூடாக்குகிறது. அடுத்த நிமிடம் அந்த வேகம் தணிகிறது. வேகம் தணிந்ததும் நரம்புத் தளர்ச்சி அவனை வீழ்த்தி விடுகிறது.

—சக்தி

# வாழவைப்போம் ... தொழிலாளரை

**பி. வி. கந்தையா**
(பொதுச் செயலாளர்)

மலையகத் தொழிலாளர் வாழ்க்கையில் ஒளி பெறக் கூடிய நடவடிக்கைகளைத் தொழிற்சங்கங்கள் செய்திட வில்லை. மலையக மக்களுக்கு வேலை நேரங்களில் மாற்றம், வீட்டுவசதிகள் - மாதாந்தச் சம்பளம் - பள்ளிக்கூடங்கள்- பொது அறிவுக் கூட்டங்கள்- இலக்கிய சர்ச்சைகள் - உரிமை பற்றிய கருத்தரங்குகள்- கைத்தொழில் நிலையங்கள் முதலியன வற்றைத் தொழிற் சங்கங்களே ஆரம்பித்து நடத்தியிருக்கலாம் என்பதை யும், தொழிலாளர்கள் எப் படித் தொழிற்சங்க வாதிக ளால் ஏமாற்றப் படுகிறுர் கள் என்பதையும் இக்கட் டுரை சொல்லாமல் சொல் கிறது. —ஆ-ர்.

ஒருசில மலையகத் தொழிற்சங் கங்கள் கால் ஆண்டுகளுக்கு முன் ஆரம் பிக்கப்பட்டன வாகும். ஆரம் பிக்கப்பட்டபோது தொழிலாளர் களின் முன்னேற்றத்தை அடிப் படையாக வைத்துத்தான் இச்சங் கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனல் இன்றோ தொழிற்சங்கங் கங்கள் வியாபார நோக்கத்தோடு செயல்படுகின்றன. TRADE-UNION என்பதன் கருத்தை அப்படியே அவைகள் மாற்றிக் கொண்டனபோலும். தொழிலாளர்களின் வாழ்க்கை யோ அன்று இருந்ததைவிட இன்று மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது. வருமானம் நாளுக்கு நாள் குறைகிறது. வேலை நாட்களை குறைக்கும் போர்வையில் வருமானத்தைக் குறைத்துவிட் டார்கள். இவர்களுக்காக இயற்றப் பட்ட சட்டத்திலோ ஆறு நாட் கள் வேலை கொடுக்கவேண்டும்; அல்லது ஆறு நாட்கள் சம்பளம் கொடுக்கவேண்டுமெனக் கூறப்பட் டுள்ளது. தொழிற்சங்கங்களும் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்தி டவில்லை. அரசும் மௌனம் சாதிக் கிறது. இந்த அவல நிலையை மாற் றும் எண்ணத்தோடும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை [redacted] சம்பளமாக மாற்றவேண்டு மென தொழிலாளர் தேசிய சங்கம் குரல் எழுப்பியது- இந்த நிலையில் தொழிற்சங்கங்கள் என்ன செய் கின்றன? நான் பெரியவன், நீ சிறியவன் என்று போட்டி போட் டுக்கொண்டிருக்கின்றனவே தவிர தொழிலாளர்களின் வறுமையைப் போக்கி, அவர்களையும், சமூகத்தில் மனிதர்களாக வாழவைக்கத் துணியவில்லை. சில தொழிற்சங் கங்கள் வளர்ந்துள்ள அளவிற் குத் தொழிலாளிகளின் வாழ்வு வளரவில்லை. வளர்ந்துவரும் தொழிலாளர் சங்கங்களும் தொழி லாளர்களை வளர்த்திடவில்லை.

சில தொழிற்சங்கத் தலைவர்கள் வெளிநாடுகளுக்குப் போய் தொழி லாளர்கள் சம்பந்தப்பட்ட கருத்த ரங்குகளில் பங்குபற்றுகிறுர்கள். அவர்கள் சென்றுவரும் நாடுகளி லுள்ள தொழிலாளர்களின் வாழ்க் கைவசதி, வேலைவசதி, சம்பளம், வீடு ஆகிய அடிப்படைப் பிரச் சினைகளையும் ஆராயத் தவறுவ தில்லை. நாடு திரும்பியவுடன் ஏனைய நாடுகளிலுள்ள தொழிலா ளர்களின் நிலைக்கு நம்நாட்டுத்

தொழிலாளர்கள் உயரவேண்டுமென முழங்குகிறார்கள். தொழிலாளிகளும் திருப்தியடைந்துவிடுகிறார்கள்.

மலையகத் தொழிலாளர்களுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் தொழிற்சங்கங்கள் இதுவரை ஈடுபடவில்லை என்பது மறைக்கமுடியாத உண்மை. இந்தச் சூழ்நிலையில் எது சரி எது பிழை என அறியமுடியாத தொழிலாளர்களை தொழிற்சங்கப் போட்டிகளுக்காகவும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடச் செய்கிறார்கள்.

மலையகத்தைப் பொருத்தவரை இன்று வேலைநிறுத்தங்கள் சர்வ சாதாரணமாகிவிட்டன. ஆகவே போராட்டங்களைப் பற்றித் தொழிற் சங்கங்கள் கூட தொழிலாளிகளுக்குச் சொல்லவேண்டியதில்லை. சங்கங்களை விட்டு விலகி விடுவார்கள் என்ற பயத்தில் பல சங்கங்கள் வாய்மூடி மௌனியாக இருந்துவிடுகின்றன. தொழிலாளிகள் விடயங்களை அறிந்து கொண்டால் எங்கே தங்களை விரட்டி விடுவார்களோ, என்ற பயத்தில், அவர்களுக்குச் சுதந்திர ஆர்வத்தை ஊக்கிட சங்கக் குழுவினர்கள் பயப்படுகிறார்கள். தொழிலாளர்களும் இவர்களை நம்பியே தங்களை ஏமாளியாக்கிக் கொள்கின்றனர்.

தொழிலாளர் தேசிய சங்க ஸ்தாபகர் அமரர் வி. கே. வெள்ளையன் அவர்கள் தொழிலாளிகளை இந்தக் கேவலமான நிலையிலிருந்து மாற்றி அவர்களைச் சமூகத்தில் மனிதர்களாக மதிக்க வேண்டுமென அயராது உழைத்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். தொழிலாளிகள் இன்று ஓரளவிற்குத் தங்கள் பிரச்சினைகளை உணர்ந்து செயல்படும் அளவிற்கு முன்னேறியுள்ளார்கள். தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளியிடம் எதையும் மறைப்பது கிடையாது. உண்மை நிலையை விளக்குகிறது. தொழிலாளிக்கு அது கசப்பாக விருந்தாலும், பின்னால் சிந்திக்கும் போது உண்மையை உணர்ந்துவிடுகிறான். தொழிலாளர் தெசிய சங்கம் தொடர்ந்து இச் சேவையில் ஈடுபட்டு, அவர்களை சமுகத்தில் உன்னத மனிதர்களாக மாற்றும் என்பது நிச்சயம்.

---

## தீபாவலியா ? தீபாவளியா ?

தீபாவலி இந்துக்களின் திருநாள். இந்துமதம் ஆரியர் மதம். திராவிடர் மீது திணிக்கப்பட்ட மதம். திராவிடரின் தத்துவம் சைவ நீதி. அது மதங்களுக்கு அப்பாற்பட்டது. தீப்பாவலி பழையகாலத்துக் கதை. அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த போரின் கதை. (அக்காலத்தில் ஆரியர்கள், தங்களைத் தேவர்களாகவும் (அரசர்களாகவும் திராவிடர்களை (ராட்சதர்களாகவும்) கூறித் தென்னகத்தவர் மீது போர் தொடுத்துவந்தனர். இப்படியே ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த பொரில் திராவிடத் தலைவனொருவனுடன் நேர் நின்று போர் செய்ய முடியாத ஆரியத்தலைவனைக் காப்பாற்ற வஞ்சகமாக வேலெறிந்து திராவிடத் தலைவனைக் கொன்றாள் ஆரியரின் தலைவி. பிற்காலத்தில் ஆரியரின் அரசர்களை வணங்கிப்பணியும் கொள்கைள் இந்துமதக் கடவுள் வழிபாடாகியது. அவ்வகை வந்ததே தீபாவலியும். இது ஆரியரின் வெற்றித் திருநாள், இதனைத் திராவிடர்கள் இந்து மதத்தைத் தழுவிய காரணத்தால், தங்கள் திருநாளாகவும் கருதுகின்றனர். இது தவறு. இதனைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் தினத்தை தீபத் திருநாளாக மாற்றி வருகிறார்கள் அறிவாளர்கள். தீபாவளி (தீப+ஆவளி) என்பது திபவரிசை எனப்படும்.

—சக்தி

# மாவலிச் சித்தர் பதில்

எஸ். ஜோர்ஜ் துரைராஜ்
மல்லியப்பு, அட்டன்

கே. சமயமில்லாமல் மனிதனுல் வாழமுடியுமா?

ப. தருணம், காலம், மார்க்கம் என்ற கருத்துக்களுடையது சமயம். வாழ்வும் ஒரு சமயமே.

கே. பெண் இல்லாமல் ஆணுல் வாழுவது சுபமா? அல்லது ஆண் இல்லாமல் பெண்ணுல் வாழுவது சுபமா?

ப. சுகமாக வாழ்வதற்கு ஆணும் பெண்ணும் இனிய உறவு கொண்டு வாழலாம். சுபமாக வாழ்வதற்கு அவரவர் தன்மைக்கேற்ப தனித்தோ ஒருமித்தோ சுபமாக வாழமுடியுமே.

வி. கணேசன், பூசலாவை.

கே. தமிழினத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப. சுதந்திரப் பாதையைச் செய்துகொண்ட தமிழினம் அதில் ஒருமைப்பாட்டுடன் வீர நடைசெய்து வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துவோம். பெருமை பெறச் செய்வோம். அங்கே தமிழின்பம் பெருக்கெடுத்திட ஆவன ஊக்கிடுவோம்.

எம். பி. நடராஜா, பொகவான குருப், பொகவந்தலாவை.

கே. இலங்கையில் தோன்றிய எல்லாத் தொழிற்சங்கங்களும் தொழிலாளிக்கு நன்மை செய்கின்றனவா?

ப. இல்லை.

செல்வி. ஏ. இந்திரா துரைராஜ்,
மாபோலை, வத்தளை.

கே. மது அருந்துகிறவர்களால் யாருக்கு இலாபம்,

ப. மதுக்கடைக்காரனுக்குத் தான். மது அருந்துகிறவனுக்கல்ல.

ஆர் பி. காந்தன், யொக்ஸ்
போர்ட் தலவாக்கொல்லை

கே. மலையகத்தில் காளான்களைப்போல மலியும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நன்மைக்காகவா...?

ப. இல்லை. காளான்களைப் போலப்போவதற்குத்தான்.

செல்வி சசித்திரா லிங்கம்
பிரதான வீதி, டிக்கோயா.

கே. மலையகத்தின் நேற்றைய, இன்றைய, நாளைய தலைவர்கள் யாவர் ?

ப. நேற்றையவர் இருந்தவர்; இன்றையவர் இருப்பவர்; நாளையவர் பிறப்பவர்.

எஸ். ஆனந்தன், அன்பு நிலையம்,
பொல்காவலை.

கே. மாவலி விமரிசனம் படித்தேன். எங்கே பெறலாம் எனக் கூறுவீர்களா?

ப. தொழிலாளர் தேசிய சங்க அலுவலகங்களில் கிடைக்குமே.

க. செ. துரை, முத்துலட்சுமி,
பொகவந்தலாவை

கே. சித்தரே ! தமிழர் கூட்டணி பற்றித் தங்கள் கருத்து ?

ப. பாழ்பட்டு, வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக் கெட்ட தமிழர்களின் வாழ்வு வளம் பெற ஒன்றுபட்ட தமிழினத்தைக் கண்டு நீர்மட்டும் மகிழ்ந்தால் போதுமா, நானும் மகிழ்கிறேன்.

எம். கோவிந்தசாமி, கல்கந்தை,
மஸ்கெலியா.

கே. மலையகத்திலிருந்து இது வரை எத்தனைபேர் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர்?

ப. பல்லாண்டுகளாகப் பல இலட்சம். இலங்கை இந்திய ஒப்பந்தப்படி 1973 ஆகஸ்ட் நடுப்பகுதிவரை 92,000 பேர்கள்.

கே. இலங்கைக் குடியரசு செய்து வரும் நன்மைகள் என்ன?

ப. வத்தாலி, மரவள்ளிக்கிழங்களை உண்ணப் பழக்கு விப்பது.

டீ. யோகா. இறம்பொடை

கே. தொ. தே. சங்க 7வது மகாநாட்டுக்கு, மாவலிச் சித்தர் வருகை தராதது ஏன்?

ப. டுப் வேண்டாம் டுப் யாம் வந்தோம் வருகை தந்தோம்... நீர் தேனீர் குடிக்கப் போய்விட்டீரே.

ரா. கந்தசாமி, பண்டாரவளை.

கே. காதலிப்பது எப்படி என்று ஒரு அட்வைஸ்...?

ப. குடும்பக் கட்டுப்பாட்டைப் போதிக்கும் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு ஒரு அட்லஸ் ஒன்லி கோர்ஸ் எடுத்துப் பாருங்களேன்.

எஸ். மார்க்கண்டன், மத்துகாமம்

கே. கவிஞர் சக்தி பாலையா அவர்களின் தேசியப் பாடல்களை இலங்கை வானொலி ஒலி பரப்புவதில்லையே ஏன்?

ப. தேசியக் கவிஞர்கள் சுதந்திரத் தாகமிக்கவர்கள். சுதந்திர பாடல்களால் மக்களின் உள்ளத்தில் வீர சுதந்திரக் கனலை ஊக்குவிப்பவர்கள் தமிழினத்துத் தேசியக் கவிஞர் "சக்தி" யின் தேசியப் பாடல்களை இலங்கை வானொலிக்கு ஒலிபரப்பிடும் துணிவு கிடையாது.

வி.எம். கிருஷ்ணன்,
மஸ்கெலிய.

கே. மண்ணுலகில் பெண்ணுகிப் பிறந்து ஈழத்தில் வாழ்ந்து நாட்டு மக்களை மயக்கி வரும் மாயக்காரி யார் என்று சொல்லமுடியுமா ?

ப. ஆயிரந்தலை வாங்கிய ஆபூர்வ சிந்தாமணி தான் என்று கர்வம் கொண்டவளாக மூன்று தலைகளைத் தன் சேலைத் தலைப்பால் மூடி மறைத்திருக்கும் வத்தலவதியைத்தானே கேட்கிறீர்!

கே. செல்வராஜ் பெரியவேர்க் கொல்லை. டிக்கோயா

கே. வாழ்க்கையில் இலட்சியம் இல்லாதவன் நிலை எப்படிப் பட்டதாக இருக்கும் ?

ப. பிறேக் இல்லாத மோட்டார்வண்டி கடுகண்ணுவைப் பள்ளத்தை நோக்கிப் பாய்வதைப் போலிருக்கும்.

செல்விகள். மு. சீதாலட்சுமி, மு. சத்தியவாணி சாஞ்சமலைத் தோட்டம், டிக்கோயா.

கே. உலகத்திலே தொழிற்சங்கம் எப்போது எந்த நாட்டில் யாரால்தொடங்கப் பட்டது ?

ப. அமெரிக்காவிலுள்ள "பியூனஸ் அயர்ஸ்" (BUNOES AIRES) என்ற நாட்டில் சாமுவேல் காம்பர்ஸ் என்பவரால் 1878ல் அச்சுத் தொழிலாளருக்காக துவங்கப்பட்டது. முதன் முதல் நிறுவப்பட்ட உண்மையான தொழிற்சங்கம் அதுதான். மேலும் விளக்கத்திற்கு

மாவலி அக்டோபர் இதழ் 32ம் பக்கம் பார்க்க.

கே. தொழிலாளர் தேசிய சங்கத்திற்கும் மற்றைய தொழிற்சங்கங்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

ப. ஒற்றுமை—சந்தா வசூலிப்பதில்.
வேற்றுமை—தொழிற்சங்கக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில்.

கே. தனிமனிதன் தன்முயற்சியை எப்போது வெளியிடுவான்.

ப. தனிமனித முயற்சி உலக முயற்சி. தனிமனிதன் உருவானபோதே அவன் முயற்சியும் வெளியானதென்பதே விளக்கம்.

குறிஞ்சி. அ. பாலகிருஷ்ணன்
சி. மண்வெட்டி தோட்டம்
கொட்டகலை.

கே. தமிழர் கூட்டணியின் தனிநாடு கோரிக்கையைப் பற்றியும் அதில் தலைவர் திரு. தொண்டமானின் தலையீட்டைப்பற்றியும் தங்களின் கருத்தென்ன?

ப. தமிழர் கூட்டணி தமிழ் மக்களின் இன ஒருமைப் பாட்டினைக் குறிப்பதாகும். இலங்கையிலுள்ள மலையகம், வடக்கு, கிழக்கு, கரையோரத் தமிழர்கள் முதலியோர் இதனுள் அடங்குவர். பிரச்சினைகளைப் பொருத்தமட்டில் தனிநாடு கோரிக்கை தவிர்ந்த ஏனைய பிரச்சினைகள் யாவும் தமிழின ஒருமைப்பாட்டு உரிமைப் பிரச்சினைகளே. தனிநாடு கோரிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களை மட்டும் உட்படுத்துவதாகையால் அது மலையகத் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தாது. பொதுவான இன உரிமைகளுக்காகத் திரு. தொண்டமான் கூட்டுச் சேர்ந்துள்ளது நியாயமே. தனிநாடு கோரிக்கையும் தமிழினத்தின் தன்மானம் காப்பதாகையால் அதைத் தமிழர்கள் ஆதரிப்பதில் தவறில்லையே. திரு. தொண்டமானின் தலையீடு அவரது இனப்பற்றுக்கு ஒரு எடுத்துக் காட்டு.

கே. இன்றைய இளைய மலையகத்தின் எழுச்சியின் இலட்சியம் எதுவாக இருக்க வேண்டும் எனத் தாங்கள் ஆசைப் படுகிறீர்கள்?

ப. தனது இனம், மொழி, பண்பாடுகளைப் பாதுகாத்திடும் சுதந்திர ஆர்வத்துடன் திடங்கொண்டு செயலாற்றும் தீரர்களாகத் திகழ வேண்டும். என ஆசைப் படுகிறேன்.

ஏ. மாரியப்பன், நாவலப்பிட்டி.

கே. ஏன்! மாவலிச் சித்தர் செப்டம்பரில் பிரசன்னமாக வில்லை?

ப. மாவலிச் சித்தர் செப்டம்பரில் பல பக்தர்களுக்கு காட்சிகொடுக்கப் போயிருந்தார். எம்மை உமது ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக நன்றி.

கே. 'மாவலி' தோட்டத் தொழிலாளருக்கு மாத்திரம் வெளியிடப் படுகிறதா அல்லது மற்றவர்களுக்காகவுமா?

ப. படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் பயன்தரும் என்ற எண்ணத்துடன் வெளியிடப் படுகிறது.

# கீதாஞ்சலி

ஆங்கில மூலம் — தமிழ் வடிவம்

மகாகவி ரபீந்ரநாத் தாகூர். — சக்தீ பால—ஐயா

(1)

பிரபுவே!

என்னை முடிவில்லாதவளாகத் தாங்கள் சிருட்டித்துள்ளீர்கள். தங்களின் விருப்பமும் அதுதான். மிக மிக மென்மையான இந்தக் கண்ணாடிச் சாடியை அடுத்தடுத்து வெறுமையாக்கி அதனில் மீண்டும் மீண்டும் மதுரமான வாழ்வை நிரப்புகிறீர்கள்.

இச்சிறு ஊது குழலைக் குன்றுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் தாங்கள் ஏந்திச் சென்று அதன் நாதத்தில் நவ நவமான அழியாத புதுமையை உயிர்ப்பிக்கிறீர்கள்.

தங்கள் கரங்களின் நித்தியமான அரவணைப்பினால் எனது இளம் இதயம் மட்டற்ற மகிழ்ச்சியுள் தன்னையே இழந்து வர்ணிக்க முடியாதசொற்களை என்னுள் பிறப்பிக்கிறது.

தங்களின் அழியாத பரிசுகள் எனது இந்தச் சிறிய கரங்களில் மட்டுமே வந்து சேர்கின்றன. வயதுகள் பல கடந்தாலும் தாங்கள் அழிவற்ற பரிசுகளை சொரிந்து கொண்டுதானிருக்கிறீர்கள். இன்னமும் நிறைவடைவதற்கான இடமும் இருக்கத்தான் செய்கிறது.

(2)

எப்போது தாங்கள் எனைப் பாடும்படிக்கு உத்தர விடுவீர்களோ, அப்போது என் இதயம் பெருமை தாங்காமல் வெடித்து விடும் போலிருக்கிறது. தங்களின் திருமுகத்தைப் பார்க்கிறேன். எனது கண்களில் கண்ணீர் கசிந்து நிறைகிறது.

எனது வாழ்க்கையில் இம்சைகளும், இணங்காதவைகளும் ஒரே இனிய நாதத்துள் உருகிக் கலந்துவிடுகின்றன. ஒரு ஆனந்தமான பறவை தனது இறக்கைகளை விரித்துக் கடல்தனைக்கடப்பது போல எனது அருள்திரு வழிபாடும் விரிந்து பரந்துவிடுகிறது.

நான் பாடும்போது எனது பாட்டிலே தாங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்பது எனக்குத் தெயும்.

தங்களின் தோற்றத்தின் முன்னே ஒரு பாடகியாக மட்டுமே வருகிறேனென்பதும் எனக்குத் தெரியும்.

தங்களின் திருவடிகளை அடையுவேனென்று எப்போதுமே எண்ணிப் பார்த்திட முடியாதிருந்த நான் வெகு தொலைவிற்கு விரியும் எனது பாடலின் சிறகுகளின் முனையால் தங்களின் திரு வடிகளைத் தொடுகிறேன்.

எனது பாட்டின் ஆனந்த அமுதை அருந்தி, எனை மறந்து என் தோழா! என் பிரபுவே! என்று தங்களை அழைத்துக் களிப்படைகிறேன்.

—தொடரும்

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# "மாவலி"

## விளம்பர விபரம்

### அட்டை ஆர்ட் கவர்

| | |
|---|---|
| முன் உட்புறம் — | 1 கலர்—100/- |
| முன் உட்புறம் — | 3 கலர்—125/- |
| பின் உட்புறம் — | 1 கலர்—100/- |
| பின் உட்புறம் — | 3 கலர்—125/- |
| பின் வெளிப்புறம் — | 1 கலர்—125/- |
| பின் வெளிப்புறம் — | 3 கலர்—150/- |
| உள்ளே முழுபக்கம் — | 75/- |
| ,, அரை பக்கம் — | 50/- |
| ,, கால் பக்கம் — | 35/- |

புளொக்குகள், டிசைன்கள் செய்வதானுல் தனியே பணம் செலுத்தப்பட வேண்டும்.

விபரங்களுக்கு:-

நிர்வாகி,
"மாவலி"
அறை 1, மாடி 2,
ஃபேவரிட் கட்டிடம்,
காலி வீதி, கொழும்பு-3

தொலைபேசி: 88538

இங்கே

"மாவலிச் சித்தர்"
அறை 1, மாடி 2,
ஃபேவரிட் கட்டிடம்,
காலி வீதி,
கொழும்பு-3.

கத்தரி -யுங்கள்

Published for the National Union of Workers, Room, 1, Floor. 2. Favourite Building, Colombo, 3. and Printed at the Varuna Printers, Colombo - 12
Managing Editor. C. V. Velupillai